Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி
EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 23 (24.07.2003) வியாழக்கிழமை இதழ்: 295



நினைவுத்தூபியை தகரங்களால் மூடும் படையினர்.



அப்பகுதியெங்கும் குவிந்தது இராணுவம்.



மாலையில், நினைவுத்தூபி திறப்பு விழாவில் மக்கள்.

# செல்லக்கிளி நினைவுத் தூபியினருகே பொதுமக்களுடன் படையினர் முறுகல்!

## நினைவிடத்தைத் தகரங்களால் மூடவே கொதித்தெழுந்து அகற்றினர் மக்கள்!

(யாழ்ப்பாணம்)

**திருநெல்வேலிப் பகுதியில், பொதுமக்களால் நிர்மாணிக்கப்பட்ட லெப்.செல்லக்கிளியின் நினைவுத் தூபியை, நேற்று மதியம் படையினர் சுற்றிவளைத்து தகரங்கள் கொண்டு மூடினர். இதனால், பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் வெடிக்கும் அளவுக்கு பதற்றநிலை தோன்றியது. எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தலையிட்டதையடுத்து அப்பகுதியில் சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டது**

திருநெல்வேலியிலுள்ள தபாற்பெட்டிச் சந்தியில் - இருபது ஆண்டுகளுக்கு முன்னர், லெப்.செல்லக்கிளி வீரச்சாவடைந்த அதேயிடத்தில், நினைவுத்தூபியொன்று பொது மக்களால் நிர்மாணிக்கப்பட்டது.

இதேயிடத்தில், நேற்று மாலை லெப்.செல்லக்கிளியின் 20 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நடைபெறவிருந்தது. இதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவ்வேளையில் - நேற்று நண்பகல் 1 மணியளவில் அப்பகுதிக்குத் திடீரென விரைந்துவந்த நூற்றுக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செல்லக்கிளிக்கு அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரான லெப்.செல்லக்கிளி அம்மானின் 20 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, நேற்று திருநெல்வேலி - தபாற்பெட்டிச் சந்தியில், நினைவுத்தூபி திரைநீக்கம் செய்யப்பட்டது.

இருபது வருடங்களுக்கு முன்னர் - இராணுவத்தினர் மீதான கண்ணிவெடித் தாக்குதலின்போது, லெப்.செல்லக்கிளி அம்மான் வீரச்சாவடைந்த இடத்திலேயே, நினைவுத்தூபி நிறுவப்பட்டுத் திரைநீக்கம் செய்யப்பட்டது.

நேற்றுமாலை 6 மணியளவில், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக சம்பவத்தால் அபிவிருத்திப்பணிகள் பாதிக்கா!

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தால், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள், தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக, வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலைகளைக் கையளிக்கும் வைபவத்தில், பிரதம விருந்தின

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் - வெஸ்பேர்க் சந்தித்துப் பேச்சு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது - இடைக்கால நிர்வாகசபைக்கான திட்டவரைபு குறித்தும், இந்த விடயம் தொடர்பாக - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனையில் வான் புரண்டு எழுவர் காயம்!

வேகமாக வந்த வான், கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில், சாரதி உட்பட ஏழு பேர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 4.30 மணிக்கு குடத்தனையில் நடைபெற்ற இந்த சம்பவத்தில், வானின் சாரதியான மணற்காட்டைச் சேர்ந்த மரியதுரை அமலதாஸ் (வயது 41), குடத்தனை பொற்பதியைச் சேர்ந்தவர்களான ஜெயபாலன் விக்ரோரியா (வயது 21), அந்தோனிப்பிள்ளை டிலக்சியா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் தம் தலைவிதியை தாமே தீர்மானிக்க வேண்டும்!

### கொழும்பில் 'பொங்கு தமிழ்' பிரதிநிதிகள்

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை அரசு ஒப்படைக்குமானால், முஸ்லிம்களுக்குப் பாதகம் ஏற்படாது. சிங்கள மக்களிடம் தமிழ் மக்கள் உரிமையைக் கேட்பது போல, முஸ்லிம்கள் - தமிழ் மக்களிடம் தமது உரிமையைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படாது."

- இவ்வாறு யாழ் பல்கலைக்கழக 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழுவின் பிரதிநிதிகள், நேற்று கொழும்பு நிப்பொன் ஹோட்டேலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் அவர்கள் தெரிவித்ததாவது-

தமிழ்மக்களின் தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கு, தமிழ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "வியாசனின் உலைக்களம்" நூல் வெளிவருகின்றது!



கவிஞர் புதுவை இரத்தினதுரை - வியாசன் என்ற மறுநாமத்தில் - 'உலைக்களம்' என்ற மகுடத்தில், கடந்த பன்னிரண்டு வருடங்களாக, 'விடுதலைப் புலிகள்' ஏட்டில் எழுதிவரும் 'உணர்வின் வரிகள்' தொகுப்பு - "வியாசனின உலைக்களம்" - என்ற பெயரில் அடுத்த மாதம் முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்படவுள்ளது.

இருநூற்று எழுபத்தைந்து பக்கங்களைக் கொண்டு வெகு நேர்த்தியாக (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் கருத்தரங்கு!

யுனெஸ்கோ ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான மூன்றுநாள் பயிற்சிக் கருத்தரங்கு, நாளை முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கான தொடர் பயிற்சித் திட்டத்தை, அமுல்படுத்தும் ஐக்கியநாடுகள் கல்வி அறிவியல் மற்றும், கலாசாரப் பெருமன்றமான - யுனெஸ்கோவின் ஏற்பாட்டின் கீழ், இப்பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பத்திரிகைத்துறையில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகளை அறிமுகப்படுத்தி, வளர்ந்துவரும் சமூக, விஞ்ஞான சூழல்களுக்கு ஏற்ப, சிறப்புடன் பத்திரிகைத் துறையில் பணியாற்ற உரிய வசதிகளையும், பயிற்சிகளையும் அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அடுத்த 6 மாதங்களில், தமிழ் ஊடகவியலாளர்களுக்காக 12 பயிலரங்குகள் நடத்தப்படும். புகைப்படக்கலை, இணைய வசதிகள் உட்பட - பலதுறைகளில் சர்வதேச, தேசிய நிபுணர்கள் துணையுடன் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்தத் தொடர் பயிற்சிகளின்- முதலாவது பயிலரங்கு நாளை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை, யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது. தொடக்கவிழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, 'தினக்குரல்' ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன், 'உதயன்' ஆசிரியர் என்.வித்தியாதரன், 'நமது ஈழநாடு' ஆசிரியர் ரகுராம், 'வலம்புரி' ஆசிரியர் விஜயசுந்தரம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இளையதம்பி தயானந்தா, பத்திரிகையாளர் ஜீவகதாஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

மூத்த பத்திரிகையாளர்கள் ஏ.ஜே.கனகரட்ணா, எஸ்.பெருமாள், ஈ.ஆர்.திருச்செல்வம், கதிர்காமத்தம்பி ஆகியோர் தலைமையில்- "ஆரோக்கியமான சமூகமும், ஆரோக்கியமான ஊடகச்சூழலும்" என்ற பொருளில் கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூத்த பத்திரிகையாளர் இ.பி. டேவிட் ராஜா, எழுத்தாளர் அ.ஜேசுராசா, கல்வியாளர் கோகிலா மகேந்திரன், அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோரும், இந்தப் பயிலரங்கில் சிறப்புரையாற்றவுள்ளனர்.

நிறைவு விழாவில் கலந்துகொண்டு சான்றிதழ்களை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் வழங்குவார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 60 பத்திரிகையாளர்கள் இந்தப் பயிலரங்கில் பயிற்சி பெறவுள்ளனர்.

"தமிழ் பத்திரிகைளில் ஜனநாயகக் கடமைகளும், சவால்களும்" என்ற பொருள் பற்றி, இந்த தொடரின் முதலாவது பயிலரங்கில் விவாதங்கள் எழுப்பப்படும்.

இப்பயிலரங்கில் ஜனநாயக சவால்களும், கடமைகளும் தகவலைப் பெறுவதிலும் - வெளியிடுவதிலும் உள்ள சவால்கள், நல்லாட்சிக்கான சவால்களும் கடமைகளும் ஆகிய மூன்று கருத்துக்கள் பற்றி பத்திரிகையாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து விவாதம் செய்து, அறிக்கையும் சமர்ப்பிப்பார்கள்.

டென்மார்க் நிதியுதவியுடன், யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் இந்தப் பயிலரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## வரவேற்புபசார விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்புபசார விழா, இன்று காலை 9 மணிக்கு கலாசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலையை விட்டு வெளியேறிய ஆசிரியர்களை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு, ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றம் கேட்டுள்ளது. (110)

## சங்கானை மக்கள் வங்கிக் கிளை சனியன்றும் இயங்கும்!

(சங்கானை)

சங்கானை மக்கள் வங்கிக் கிளை, எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமை தோறும் பணவைப்புக்களை ஏற்கவும், தங்க நகை அடகு சேவைக்காகவும் காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவின்- மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில், நெடுந்தீவு அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக, ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (113)

## மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை மெய்வல்லுநர் போட்டி, இன்று பி.ப. 2 மணிக்கு அதிபர் மா.செல்வராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் - சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா பிரதம விருந்தினராகப் பங்கேற்பார்.

# கட்டாக்காலி நாய்களை புதைக்க படையினர் தடை!

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்த பின்னர், அவற்றைக் கடற்கரையோரங்களில் புதைப்பதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில், அண்மைக்காலமாக கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளன. அவற்றைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில் மாநகரசபையினர் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இவ்வாறு பிடித்து அழிக்கப்படும் நாய்களை, காக்கைதீவு போன்ற கடற்கரையோரங்களில் புதைப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதற்கு முன்னர், பழைய மாநகர சபை அலுவலகக் காணியிலேயே கட்டாக்காலி நாய்கள் கொன்று புதைக்கப்பட்டு வந்தன. அங்கும் கூட, இவற்றைப் புதைப்பதற்கு இராணுவத்தினர் தற்போது தடைவிதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பண கூட்டம்

சரசாலை தென்மத்திய கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம், நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சரசாலை மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், இப்பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு, சரசாலை மத்திய சனசமூகநிலைய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (24)

# 130 வீடுகளைப் புனரமைப்பதற்கான பணிகள்; நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில் ஆரம்பம்!

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நிக்கொட் இணைந்து நடவடிக்கை

நிக்கொட் நிதியுதவியுடன், யாழ்ப்பாண மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்தும் - நாவாந்துறை, கொட்டடி பகுதிகளில் 130 வீடுகளைப் புனரமைப்பதற்கான செயற்பாட்டுத் திட்டத்தின் ஆரம்ப விழா, கடந்த 14 ஆம் திகதி காலை தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதான சுடரை- யாழ்ப்பாணம், நாவாந்துறை பங்குத்தந்தை பீற்றர் துரைரத்தினம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பிரதம விருந்தினரான யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் விளம்பரப் பலகையைத் திரைநீககம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் செ.பத்மநாதன், நிக்கொட் பணிப்பாளர் சாம்பசிவம், யாழ்ப்பாண பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன், தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் ஆகியோர் வீட்டுக்கான ஆரம்ப கட்டுவேலையை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தனது சிறப்புரையில் -

இவ்வேலைத்திட்டத்தை நிக்கொட் நிதியுதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்துவது மிகவும் பொருத்தமானது எனவும், எதிர்வரும் மழைகாலத்திற்கு முன் இவ்வேலையை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முடித்துத்தரும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்றும், தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக - நல்லாயன் கன்னியர்மடத் தலைவி சகாயமேரி, தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.இனியவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து - விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி சிறப்புரை வழங்கினார்.


## பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறிப்பிட்ட காலம் பத்திரிகைத்துறையில் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி முடிவில் பத்திரிகைத் துறையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

எதிர்வரும் 29.07.03 அன்று காலை 11.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு



## சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima கோழித்தீன் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும் பேட்டுக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும். உங்கள் பதிவுகளை 31.07.2003க்கு முன் புதுப்பிக்கவும். தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/1259)

நிறஞ்சனாஸ் சங்கானை
கரன், குஷ்பு நடித்த
ஸ்ரீ பண்ணாரி அம்மன்
(சி-1338)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
பாடசாலை மாணவர்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்
THE ART OF WAR
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்

பிரியமான தோழி
10.30, 2.30, 6.30.9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)
இயக்கம்: விக்ரமன்



## மின்னொளியில் மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

# பூங்கனிச்சோலை

எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு)
காலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை

- எமது தாயகத்தில் எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் பளிங்குக் கற்களினால் புதிதாக வடிவமைக்கப்பட்ட தேர், தண்ணீர்ச் சிந்திகள் மற்றும் பல.
- உங்கள் சிறார்கள் பார்த்து மகிழ ஓர் அரிய சந்தர்ப்பம்! உயிருள்ள மிருகங்கள், மான்கள், குரங்கு, மயில், பறவையினங்கள் செயற்கை மிருகங்களான யானை, புலி, டைனோசர், கழுகு

மற்றும் புதிய இனப் பூங்கன்றுகள்

- யூக்கோவியா, பௌடர்பிரஸ், பாங்கொக்கிச், வதனியா, 10 இன சைப்பிறஸ், வெரிகட், தொலட், அப்ரிகட், மண்டோரியா, சோண்காரி, சிங்லவெதர், தைத்ரிச்சா, கேடிற் இந்தியா ஆகியனவும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
- சிங்கப்பூர் காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள இந்த இயற்கை எழில் நிறைந்த காட்சிகளைக் கண்டு மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

021-2222976

E.mail: poonganisoolai@yahoo.com

முடமாவடி,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

(சி/1260)

## நாடும் நடப்பும்



நன்றி - தமிழ் கார்டியன்

# அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழல்; எதிராக கடுமையான நடவடிக்கை!

## கல்வியமைச்சர் கொடித்துவக்கு எச்சரிக்கை

வலயக் கல்விப் பணிப்பாளர்கள, பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊழல் மற்றும் தவறான முகாமைத்துவம் தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துவருவதாக, கல்வியமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். அத்துடன் - இது குறித்து தான் கவனம் எடுத்துள்ளதாக அவர் மேலும், குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இத்தகைய ஊழல் முறைப்பாட்டை அடுத்து- முன்னணிப் பெண்கள் பாடசாலை ஒன்றின் அதிபரும், நான்கு ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அநேகமாக- நாட்டிலுள்ள 93 கல்வி வலயங்களிலிருநதும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கல்விப் பிரிவில் - இவ்வாறு திடீரென ஒழுக்கக்கேடுகள் தற்போது அதிகரித்தமைக்கு, அரசியல் செல்வாக்கே காரணம். அநேகமான வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அரசியல் செல்வாக்கினூடாகவே வந்துள்ளனர். இவர்களுக்குத் தகுந்த கல்வித்தகுதி இல்லையென அறிகிறேன்.

நாட்டின் கல்வித்தரத்தை உயர்த்த எவ்வளவோ முயற்சிக்கிறோம். இதற்குக் குறுக்காக நிற்கும் எந்தத் தீயசக்திக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர, வேறு மார்க்கம் இல்லை எனவும், கல்வியமைச்சர் தெரிவித்தார்.

### கிழக்குப் பகுதியில் மீண்டும் வழமைநிலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த ஹர்த்தால் முடிவடைந்ததையடுத்து, அம்மாவட்டங்கள் நேற்று வழமைக்குத் திரும்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்றுக் காலை முதல் - போக்குவரத்து சேவைகள் வழமைக்குத் திரும்பியதுடன், மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

### நுண்ணலைத் தொலைபேசி வசதி

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான நுண்ணலை மூலமான தொலைபேசி இணைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் இத்தொடர்பு ஏற்படுத்தப்படும். இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று - கடந்த திங்கட்கிழமை இந்திய வி.எஸ்.என்.எல். நிறுவனத்துக்கும், இலங்கை ரெலிகொம்மிற்கும் இடையில் கைச்சாத்தானது.

# முக்கியமான அமைச்சர்கள், எம்.பிக்களின் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கத் திட்டம்

## கொழும்பு வந்த சி.ஐ.ஏ. உயரதிகாரி ஆலோசனை

ஆளும் கட்சியிலுள்ள முக்கியமான அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசி உரையாடல்களை - ஒட்டுக்கேட்டுப் பதிவுசெய்யுமாறு படைத் தலைமைகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த அமெரிக்கப் புலனாய்வுச் சேவையின் உயரதிகாரி புறூஸ் ஹொவ்மண்ட் இது தொடர்பாக சில ஆலோசனைகளை வழங்கியதன் பேரில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அண்மையில் புறூஸ் ஹொவ்மண்டுக்கும், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரும், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான மெரில் குணரட்ணவுக்கும் இடையில் நடந்த தனியானதொரு சந்திப்பின்போதே, தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட வேண்டிய சில முக்கிய அமைச்சர்களின் பெயர்களை - குறிப்பிட்ட அமெரிக்க உயரதிகாரி, மெரில குணரட்ணவிடம் தெரிவித்தாராம்.

இவ்வாறு ஒட்டுக்கேட்கப்படும் விபரங்களைத் தனக்கு வாராந்தம் தருமாறு, புறூஸ் ஹொவ்மண்ட் - மெரில் குணரட்ணவிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும், ஹொவ்மண்ட்டிடம் ஒப்படைக்கப்படும் தொலைபேசி உரையாடல்களின் பதிவுகளின் அடிப்படையில் - அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில ஆலோசனைகளை வழங்குவார் எனவும், அரச வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

இதேவேளை - இவ்வாறு முக்கிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுமாயின், அது அரசாங்கத்திற்குள் பாரிய பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் உடனடியாகவே உருவாக்கிவிடுமென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே - குறிப்பிட்ட அமெரிக்கப் புலனாய்வுச் சேவை அதிகாரியை, உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றுமாறும் - அவர் நாட்டின் பாதுகாப்புச் சம்பந்தமான முக்கிய விடயங்களில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருந்தமையும் தெரிந்ததே.

# பிரான்ஸ் தூதரக பாதுகாப்பு அதிகாரி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்!

## உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி ஆராய்வார்

(கொழும்பு)

பிரான்ஸ் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் - யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். இவர், குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களுக்குச் சென்று, நிலைமைகளை நேரில் அவதானிப்பதோடு, பலாலியில் உள்ள படை உயரதிகாரிகளுடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட - கிழக்கிலுள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆலோசனைகளை வழங்கவென, பாகிஸ்தானிலுள்ள ப்ரெஞ்சுத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் ஜேன்பியர் ஷெஸ்னெக் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் - கிழக்கிலங்கையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், இராணுவத் தரப்பினர், மதத் தலைவர்கள் பல தரப்பினரையும் சந்தித்து உரையாடிய பின்னர், யாழ்ப்பாணத்திற்குப் பயணித்திருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

இவரைச் சந்தித்த மட்டுநகர் - திருமலை ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, இலங்கை அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களையும், அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கு இந்த சாசனம் எத்தகைய தடைகளைக் கொண்டுள்ளது என்பதையும் இவரிடம் தெளிவாக விளக்கியதாகவும் தெரியவருகின்றது.

# ஏ-9 வீதிப் புனரமைப்புப்பணி டிசம்பருக்குள் முடிந்துவிடும்!

## வீதி அதிகார சபையினர் அறிவிப்பு

ஏ - 9 வீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புனரமைப்புப் பணிகள் யாவும், இந்த வருடம் டிசம்பர் மாதத்திற்குள் பூர்த்தியடைந்துவிடும் என, வீதி அதிகாரசபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வீதியை மீள்புனரமைப்பிற்குட்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இதுவரையில் நாற்பது சதவீதமான பணிகள் முடிவடைந்திருப்பதாகவும்,

டிசம்பர் மாதமளவில் இப்பாதையில் போக்குவரத்து மிக இலகுவானதாக மாறிவிடுமெனவும், அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஏ - 9 வீதிப் புனரமைப்பின் ஆரம்பக் கட்டங்களில் சில பிரச்சனைகள் எதிர்நோக்கப்பட்டன. கண்ணிவெடி அகற்றுதல், வீதிப் புனரமைப்புக்குத் தேவையான பொருட்களைக் கொண்டுவருதல் ஆகிய விடயங்களில் சில சிக்கல்கள் இருந்தாலும், தற்போது இது போன்ற விடயங்கள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும், அப்பேச்சாளர் தெரிவித்தார்.

ஏ - 9 வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டுள்ள நான்கு ஒப்பந்தகாரர்கள் தமது பணிகளைத் தாமதமாகவே தொடங்கியுள்ள போதிலும், அவர்கள்- குறிப்பிட்ட காலஎல்லைக்குள் பணியை முடித்துக்கொள்ள வேண்டுமென, வீதி அதிகாரசபை வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

613 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திருத்த வேலைகளுக்காக - 500 மில்லியன் ரூபாவை- ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது தெரிந்ததே. எனினும், இந்த வீதியின் முழுமையான புனரமைப்பிற்காக- திட்டமிடப்பட்டதிலும் பார்க்க, இன்னமும் 82 மில்லியன் ரூபா தேவைப்படும் என, வீதி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

# அவுஸ்திரேலிய குடியேற்றம்; புதிய திட்டம் தயாராகின்றது!

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

அவுஸ்திரேலியாவில் சட்டரீதியாக குடியேறவிரும்புவோரை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், செயற்திட்டம் ஒன்றைத் தமது அரசு தயாரித்து வருவதாக, அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பல்கலாசார அமைச்சர் பிலிப் ரூடோக் தெரிவித்தார்.

மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலிய அமைச்சர் இலங்கை வந்திருந்தார். அவுஸ்திரேலியா - பல இனங்களுக்கும், கலாசாரத்திற்கும் வசதிகள் செய்துகொடுக்கும் நாடாக இருந்துவருகிறது.

இதேவேளை - சட்டவிரோதமாக நாட்டினுள் நுழைவோர் கைதுசெய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தாம் பின்னிற்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# பொ.ஐ.மு. - ஜே.வி.பி. இணைப்பு: நீண்டதூரத்திலிருக்கும் கனவே!

## ஐ.தே.க. செயலாளர் கப்புக்கொட்டுவ விபரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கடந்த இரண்டு வாரங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த, கூட்டணி பற்றிய பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பமானதாகத் தெரியவருகிறது.

இறுதியாகக் கடந்த 10 ஆம் திகதி இரு தரப்பும் சந்தித்துக் கொண்ட பின்னர் - இரு தரப்புக்குமிடையில் எற்பட்ட முரண்பாடுகளின் அடிப்படையில், அவர்களுக்கிடையிலான சந்திப்புக்கள் ஒத்திவைக்கப்பட்டு வந்தன.

நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பில் ஜே.வி.பி. சார்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவும், பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவும் கலந்துகொண்டதுடன், சுதந்திரக் கட்சி சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை -

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி என்பது நீண்ட தூரத்திலுள்ள கனவேயென, ஐ.தே.கட்சியின செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி, ஒவ்வொருநாளும் தள்ளிச் சென்றுகொண்டே இருக்கிறது. எனவே, அப்படியான கூட்டணி அமையுமா என்பது தற்போது கனவு நிலைக்கு ஆளாகிவிட்டது, என்றும் கூறினார்.

### விடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் - சிவாஜி கணேசனின் 'இரும்புத்திரை' விடியோக் காட்சியாக எதிர்வரும் ஞாயிறுக்கிழமை மு.ப. 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

# பட்டயக் கணக்காளர் பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்திலும்!

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பரீட்சைகள் இம்முறை யாழ்ப்பாணத்திலும் முதற்தடவையாக நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைகள் - இம்மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமெனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வழக்கமாக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பரீட்சைகள்- கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலேயே நடத்தப்பட்டுவந்தன.

இந்த வகையில் - பட்டயக் கணக்காளர் பிரிவில், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனமே முதற்தடவையாகத் தன்னுடைய தொழில்சார் தகைமைக்கான பரீட்சையை - யாழ்ப்பாணத்தில் நடத்தவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு நேற்று மாலை 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)



உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் குரு சஞ்சாரம் செய்யவுள்ளார். உங்கள் புத்திக்கூர்மை மிக நுணுக்கமாக இருக்கும். சிலருக்கு ஆண் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உங்கள் தந்தையாருக்குத் திடமான ஆராக்கியத்தைத் தருவார் குருபகவான்.

மருந்துப் பொருட்கள், பூச்சி மருந்துகள், இரசாயனக் கலவைகள் வழியாக உங்களுக்கு உயர்ந்த இலாபத்தைக் குருபகவான் தரவுள்ளார். உங்கள் ராசியும் குருபார்வை பெறுகிறது. எனவே, உங்களுக்கு இருந்த துன்பங்கள் விலகுகின்றன. நீண்ட ஆயுள் பெறுவதற்குரிய உடல்நிலையை உருவாக்குவார் குரு. சிலருக்குக் காதுக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஆடி மாதம் 8 ஆம் திகதிமுதல் 12 ஆம் திகதிவரை, நீங்கள் பயணங்களைத் தவிர்த்து விடுங்கள். குறிப்பாக - விமானப்பயணத்தை ஆடி மாதம் 8 முதல் 12 ஆம் திகதி முடியத் தள்ளிப் போடுங்கள். மேலும், இந்த நாட்களில் நீங்கள் மௌன விரதம் மேற்கொள்வது மேல்.

புகைப்படத்தொழில் செய்பவர்களுக்கு அத்தொழில் நன்கு கைகொடுக்கும். ஆனால், அலைந்து திரிந்தே வெற்றிபெற வேண்டி இருக்கும்.

சிலருக்குச் சகோதர, சகோதரிகளின் செல்வம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குத் தாயார் வழி ஆதரவும், தாய்மாமன் வழிச் செல்வமும், செழிப்பும் கிடைக்கும். சில நிபுணத்தன்மைகள் கைகூடும். பகைவர்கள் தலைதூக்கிப் பின் அடங்கிவிடுவார்கள்.

சிலருக்குக் கணிதத்துறை, கணினித்துறையில் உயர்கல்வி சிறக்கும். சிலருக்கு இத்துறை தொடர்பான அரசுப் பணிகளும் கிடைக்கும். தொடர்ந்து பற்றாக்குறைகள் இருக்கும். அதனை அம்பாளின் அனுக்கிரகத்தினால் நீங்கள் போக்கிக் கொள்ளவேண்டும்.

மனைவியுடன் நீங்கள் அனுசரித்துப் போகவேண்டிய காலம். சிலருக்குப் புதிய கண்டுபிடிப்புகளால் பலன் கிடைக்கும். உறவினர்களின் உதவி சிலருக்குக் கிடைக்கும்.

உங்களில் சிலர் வசீகரமான பேச்சைப் பேசுவீர்கள். பணியாட்களிடம் கண்டிப்பினைக் காட்டுவீர்கள். இதனால், பிரச்சினை தோன்றும் கவனம். கணிதம், நுண்கலைகள் இவற்றில் உங்களுக்கு ஆர்வம் அதிகமாக இருக்கும். இலக்கியத்தில் ஆர்வம் அதிகம் பெறுவீர்கள். புதுவீடு கட்டும் யோகம் பெறுகிறீர்கள். விலை உயர்ந்த வாகனங்களை வாங்கும் யோகம் உண்டு. உறவினர்களுடன் நல்ல உறவு நீடிக்கும்.

சிலருக்குப் புத்திரர்களால் பெருமைப் பாக்கியம் ஏற்படும். அரசில் நல்ல பதவி கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பூமியின் மேல் விளையும் பொருட்களால் இலாபம் உண்டு. உயர் உலோக வணிகம், நவரத்தினக்கற்கள் வியாபாரம் செய்பவராயின், உங்கள் மகனை இத்தொழிலில் ஈடுபடுத்த இது நற்காலம்.

சிலருக்குத் தந்தையால் செலவுகள் ஏற்படும். இதயம், நுரையீரலில் கோளாறுகள் தோன்றும் வாய்ப்புக்கள் உண்டு.

மனைவிக்குக் கால்களில் படைகள் தோன்ற வாய்ப்பு உண்டு. கூட்டுத் தொழில்கள் கூடாது. திடீர் வெற்றிபெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும்.

கலைத்துறையினர் புதுமைப் படைப்புகளைப் படைத்து, பரிசுகள் பெறுவார்கள். அரசியல்வாதிகள் திடீர் பாராட்டுகளால் குளிப்பாட்டப் பெறுவீர்கள்.

இரும்பு, காகிதம், வணிகர்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் சாதுரியமாக நடந்து, மகிழ்ச்சியை விளைவிக்கும்.

இந்த ராசி பெண்களுக்கு யோகமான காலம் இது. ஆடை, ஆபரணங்களைக் கணவரோ, சகோதரர்களோ வாங்கிக் குவிப்பார்கள். ஒட்டுமொத்த குடும்பமும் கடும் முயற்சி செய்து, திருமணமாகாத பெண்களுக்கு மணம் முடித்து வைப்பார்கள். அப்படிவரும் கணவரும் நல்ல நிலையில் இருப்பார்.

வசதியான வீட்டில் வாழும் மகாலட்சுமியாகத் திகழ்வீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு தேடிவரும்.

இதுவரை தொல்லை செய்து வந்த உயரதிகாரிகளை - குரு பகவான் விரட்டியடித்துவிடுவார். கவலை வேண்டாம். குரு பெயர்ச்சி மிகச் சிறப்பான காலமாக இருப்பதால், எதிர்காலத்தில் பணச் சேமிப்பில் ஈடுபடுங்கள்.

**ஆடி**

ஆடி மாதம் உங்களுக்கு அகமகிழ்ச்சியைத் தரும் மாதம். வருமானம் கூடுதலாக இருக்கும். தொழில்வளம் சிறக்கும். பெண்கள் நகை, ஆடைகள், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கிக் குவிக்க ஏற்றமாதம்.

**ஆவணி**

உங்களின் ஆத்மபலம் பெருகும். ஆன்மீக வழிபாடுகள் சிறந்து விளங்கும். கோயில்களுக்கு யாத்திரை செல்ல வாய்ப்புக் கிடைக்கும். மலைப்பாங்கான தலங்களுக்குச் சுற்றுலா செல்வீர்கள்.

**புரட்டாதி**

பகை வென்று சிறப்பீர். உங்கள் பகைவர்கள் சுட்டெரிக்கப்படுவார்கள். எதைக் கண்டும் கவலைப் படாமல் வீரநடை போடுவீர்கள்.

**ஐப்பசி**

உங்கள் மனைவிக்குத் தலைவலி, வலக்கண்ணில் கோளாறு தோன்றும் வாய்ப்புக்கள் உண்டு. அவரே உங்கள் வாழ்வின் ஏணி. அவரது விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். கணவன் - மனைவி உறவு மிகுந்த இணக்கத்துடன் இருக்கும்.

**கார்த்திகை**

உங்கள் புகழ் மங்கும். அரசின் எதிர்ப்புகள் தொடரும். செல்வம் செழிப்பு கீழ்நோக்கிச் செல்லும். கேது பிரீதி செய்து கொள்ளுங்கள்.

**மார்கழி**

தந்தையாரின் உடல்நலம் சிறக்கும். அவருக்கு இருந்த தொல்லைகள் தீரும். அரசின் நிர்ப்பந்தம் தளர்ந்துவிடும்.

**தை**

இரும்பு தொடர்பான தொழிலில் அரசின் ஆதரவு கிடைக்கும்.

**மாசி**

இரும்புத் தொழிலுடன் மருத்துவம், இரசாயனத் தொழில்கள் இணைந்து மேன்மைதரும் மாதம். உங்கள் மனைவி பேருதவி புரிந்து செழிப்பினை உண்டாக்குவார்.

**பங்குனி**

அரசின் ஆதரவுடன் உங்களில் சிலருக்குக் கடல் கடந்த பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டும்.

**சித்திரை**

அரசின் ஆதரவு அமோகமாகக் கிடைக்கும். நாவில் மிகக் கடுமை தோன்றும். இலாபம் இரும்பிலும், மருத்துவப் பொருட்களிலும் உள்ளது.

**வைகாசி**

உங்களுக்குக் கிடைத்த அரசின் ஆதரவு குறையும். தந்தையின் உடல்நலம் பாதிக்கும். இம்மாதம் உங்களுக்கு ஆகாத மாதம்.

**ஆனி**

பார்க்கடல் பள்ளிகொண்ட பரந்தாமன் திருவருளால் தீமைகள் அகலும். நிர்மூலமான வானம்போல் உங்கள் வாழ்வு குழப்பமின்றி இருக்கும். சிலருக்குப் பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும்.

(இடபராசி நாளை வரும்...)

# போஷாக்குத் திட்டத்தின் கீழ் தாய்மாருக்கு முத்திரைகள்!

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரணத் திணைக்களத்தினால் வழங்கப்படும் குழந்தை, தாயமாருக்கான போஷாக்குத் திட்டத்தில் - 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 2004 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான காலப்பகுதிக்குரிய 7 ஆவது சுற்று முத்திரை விநியோகம் - பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களிலும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் நடைபெற்று வருகின்றது.

வருமானம் குறைந்த குடும்பங்களிலுள்ள ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் தாயின் போஷாக்கைப் பேணும் நோக்குடன், இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

சமுர்த்தித் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரிவுகளில்- ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான மாதாந்த வருமானத்தினைப் பெறுகின்ற குடும்பங்களில் - புதிதாக குழந்தைகளைப் பெற்றெடுக்கின்ற தாய்மார்கள், இக்கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஞானச்சுடர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆனி மாத வெளியீடு - நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இம்மலர் வெளியீட்டுரையை சி.கிருஷ்ணபிள்ளை வழங்குவார். மதிப்புரையை சைவப்புலவர் சே.கந்த சத்தியதாசன் வழங்குவார். (17)

## விபத்தில் காயம்

கோண்டாவில் பகுதியில் எதிரெதிரே வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் காயமடைந்த நபர் ஒருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நேற்றுமுன்தினமிரவு 8.30 மணியளவில் கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக நடைபெற்ற இச்சம்பவத்தில், உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் இராசன் (வயது 30) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

## 12 பெண் சிப்பாய்களுக்கு தடுப்புக் காவல்

சாவகச்சேரியில் பெண் சிப்பாய் ஒருவர் கொலைசெய்யப்பட்டது தொடர்பான வழக்கில், சந்தேகநபர்களாகக் கருதப்பட்ட 12 பெண் இராணுவச் சிப்பாய்களைத் தடுப்புக்காவலில் வைக்குமாறு, நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது. கடந்த 2001 ஆம் ஆண்டில் இக் கொலைச் சம்பவம் சாவகச்சேரியில் நடைபெற்றது.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : பா.ஜனிஸ்ரன்
முகவரி : வளர்மதி வீதி, கைதடி.

நான்காவது அகவையில்

பெயர் : க.அக்சனா
முகவரி : மட்டுவில் தெற்கு, மருதன்குளம்.



ஏழாவது அகவையில்



பெயர் : க.ரிசாந்
முகவரி : கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : சி.சுகந்தன்
முகவரி : நவணம் தோட்டம், அல்வாய் தெற்கு.

பத்தாவது அகவையில்

பெயர் : இ.தனுஜா
முகவரி : பத்மகிரி, கட்டுடை, மானிப்பாய்.



பத்தாவது அகவையில்



பெயர் : பி.உமேஸ் பிரசாந்த்
முகவரி : சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்




# யாழ்ப்பாணத்தில் தொழில்சார் கலாசாரம் விரைவாக மாற்றம் காணுகின்றதா?

யாழ்ப்பாண மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டிய இன்றைய நிலையில் மக்களின் தொழில்சார் கலாசாரம் பற்றியும், அவற்றின் போக்குப் பற்றியும் கருத்திற்கொள்வது அவசியமானதே. தொழில்சார் கலாசாரம் என்பது - மக்களின் தொழில்சார் மனப்பாங்குகள், நடத்தைகள், விழுமியங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டது.

அதாவது, பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட தொழிலில் ஈடுபடக்கூடிய உடற்தகுதி கொண்ட அனைவரினதும் மனப்பாங்குகள், நடத்தைகள், விழுமியங்களினூடான செல்வாக்கு என்பன தொழில்சார் கலாசாரமாகக் கருதப்படும். இங்கு தொழிலாளர் - தொழில்தருநர் வடிவமாகவோ அல்லது தொழிலில் உள்ளோர் வடிவமாகவோ அல்லது தொழில் இல்லாதோர் தொழில் தேடும் வடிவமாகவோ தொழில்சார் கலாசாரம் கட்டியெழுப்பப்படலாம். இந்தக் கருத்தில், சிறுவர்கள் - நாளைய தொழிலாளர் என்ற நிலையிலும், வயது முதிர்ந்தோர் - தொழில் அனுபவஸ்தர்கள் என்ற நிலையிலும், தொழில்சார் மனப்பாங்கு, நடத்தை, விழுமியங்கள் போன்ற தொழில்சார் கலாசாரத்தில் பங்களிக்கின்றனர். இந்த நோக்கில் முழுசமூகத் தினதும் தொழில்சார் மனப்பாங்கு, நடத்தை, விழுமியங்கள் தொழில்சார் கலாசாரமாகக் கருதப்படக் கூடியனவே.

### தொழில்சார் கலாசாரம் அறிமுகம்

தொழில்சார் கலாசாரம், கைத்தொழில் புரட்சிக்கு முற்பட்ட காலங்களில் வாழ்விடங்களை மையமாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டது. இந்தக் கலாசாரம் குடும்ப சமூகக் கட்டமைப்புக்கு உட்பட்டு, பேணப்பட்டுப் பராமரிக்கப்பட்டது. எமது நாடு ஐரோப்பிய குடியேற்றமாக மாற்றப்பட்ட போது, அந்நியர்களின் நலன்களை நோக்கிய மனப்பாங்குகள், நடத்தைகள், விழுமியங்கள் திணிக்கப்பட்டு அல்லது ஊடுருவி - தொழில்சார் கலாசாரங்கள் மாற்றத்திற்குள்ளாகின. இந்த மாற்றங்கள் நன்மையானதா, தீமையானதா என்று ஆராய்வதும், தனிமனித தொழில் உரிமைகளில் கொண்டுவந்த தாக்கம் என்ன என்று ஆராய்வதும் காலங்கடந்த சிந்தனையே.

ஆனால், இந்தத் தொழில்சார் கலாசார மாற்றம் முன்னைய தந்தைவழி தொழில் போதனைக்கு அல்லது தொழில்சார் சமூகவர்க்க முறைமைக்கு மாற்றீடான முறைமைகளை அறிமுகப்படுத்தியது என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும் பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் காரணமாக - தொழில்சார் கலாசாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தால், சிறுபான்மையினராகிய நாம் கூடிய நன்மை அனுபவித்தோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. இதனால், தொழில்சார் கலாசார மாற்றத்தைக் கூடியளவு உள்வாங்கியவர்கள் தமிழர்களே. தொடர்ந்து - அந்நியர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்பு, தொழில்சார் கலாசாரம் மாற்றத்துக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோதிலும், மாற்றத்தை முன்னெடுக்காது, மாறாக - மாறியநிலையில் ஏற்றுக்கொண்டதை, வலியுறுத்த முற்பட்டமை எவ்வளவு சரியானது என்பது, ஆய்வு செய்யப்பட வேண்டியதே. இந்த நிலையில் பேரினவாத ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்புக்கும், திட்டமிட்ட சீர்குலைபபுக்கும் எதிராக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றிணைந்த தூர நோக்குடனான தொழில்சார் கலாசாரம் பற்றிய, விழிப்புணர்வு கவனத்தில் எடுக்கப்பட்டதா என்பதும் கருத்தில் எடுக்கப்பட வேண்டியதே.

## இது ஒரு ஆரம்பநிலை அலசல்

இந்நிலையில் பேரினவாத ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் நிலையில், தொழிலாளர் புலம்பெயர்தல் சார்ந்த ஒரு புதிய தொழில்சார் கலாசாரம் தோற்றம் பெற்றது. இதன் பரிமாணம் சமூகக்கட்டமைப் புக்களிலும் தாக்கங்களைப் புகுத்தியமையால், தொழில்சார் கலாசாரம் தொடர்பான "விழிப்புணர்வு" சமூகத்தில் நியாயப்படுத்தமுடியாத விடயமாகத் தனிமனித தொழில் உரிமைகளுக்கு முரணானதாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமை தொழில்சார் கலாசாரம் பற்றிய கருத்துக்களில் ஒரு "நழுவல் போக்கை" நியாயப்படுத்துகின்றது. இந்த நிலைமைகள் எதிர்காலத்தில் எவ்வளவு ஆரோக்கியமானது என்பதைச் சமூகம் கருத்தில் எடுக்கவேண்டாமா?

தொழில் வருமானத்தை ஈட்டுதல் என்பதற்கு மேலாக தெளிவுபடுத்தலாம்.



தொழிலுக்கான ஊதியம் என்பது - பொதுவாகச் சமூகத்திலிருக்கும் தொழிற்திறனுக்கான கேள்விக்கு ஏற்பவும், வேண்டப்படும் தொழிற்திறன் கொண்டோரின் நிரம்பலுக்கேற்பவும், தொழிற்திறன்களை வளர்ப்பதற்கான முதலீட்டுச் செலவுகளுக்கேற்பவும் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது - ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், தொழிலுக்கான கேள்வி அதிகரித்து, ஊதியங்கள் அதிகரிக்கப்பட்ட நிலையிலும், தொழிற்பயிற்சிகளை வழங்க - தொழில் - திருப்தியுடன் தொடர்புபட்டது. எமது பண்டைய தொழில்சார் கலாசாரம் தொழில் திருப்தியை முன்னிலைப்படுத்தியாதாகவே காணப்பட்டது. "செய்யும் தொழிலே தெய்வம்" என்று கூறக்கூடியளவுக்குத் தொழில் திருப்தி முதன்மை பெற்றிருந்தது.

ஐரோப்பியரின் படையெடுப்புக்கும், சனத்தொகைப் பெருக்கத்துக்கும், பொருளாதார வளங்களின் அருமைத் தன்மைக்கும், தொழிற்தேர்ச்சித் திறன்களின் முதலீட்டுச் செலவுக்கும், சமூகத்தின் தொழில் கேள்வி, நிரம்பல் நிலைமைகளுக்கும் ஏற்ப - தொழில் திருப்தியைப் பின்தள்ளி, வருமானத்தை, வாழ்க்கைச் செலவை முன்னிலைப்படுத்தியதாகத் தொழில் கருதப்பட்டமை தவறு என்று கருதப்படுவதில்லை. ஆனால், "தொழில் திருப்தி" முற்றாகக் கருத்தில் எடுக்கப்படாத நிலைமை அபாயகரமானதாகும். இங்கு தொழிலில் உள்ளோர், தமது தொழில் திருப்தியைப் பெறும் ஊதியத்தின் அளவீட்டில் மதிப்பிட முற்பட்டமை, தொழில்சார் கலாசாரத்தின் முரண்நிலையைத் பயிற்சி மையங்கள் தயாரான நிலையிலும், குறித்த தொழிலை நோக்கித் தொழிலாளர்கள் நகராமலிருப்பது தொழில்சார் கலாசாரத்தின் தாக்கமாகவே காணப்படுகின்றது.

இந்த நிலைப்பாடு- வேலை, மணித்தியாலங்களை விரயமாக்குதல், அளவுக்கதிகமான லீவு எடுத்தல், அலுவலகத் தளபாடங்களை விரயமாக்குதல், வேலையிலான பொறுப்பைக் கையேற்கப் பின்னிற்றல், சமூகப் பொறுப்புணர்வைக் கருத்தில் எடுக்காமை என்ற வடிவங்கள் நியாயப்படுத்தப்பட்ட தொழில்சார் கலாசாரமாக மாறிக்கொண்டிருப்பதை- ஏற்றுக்கொள்ளப் போகின்றோமா? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் தற்போது தோன்றியுள்ளது.

**சு.திலகரட்ணம்**
**விரிவுரையாளர்,**
**உயர் தொழில்நுட்ப நிறுவனம்,**
**யாழ்ப்பாணம்.**

# கணினிக் கல்வியில் திறமையான சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?

இந்த நூற்றாண்டில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரக் கூடிய ஒரு பொருத்தமான அல்லது நேர்த்தியான திறனையும், சரியான கல்வி முறைமையையும் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் அல்லது விரிவுபடுத்திக்கொள்ளலாம் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இன்று தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், எமது யாழ். மாணவர்களுக்குமிடையே ஒரு பெரும் இடைவெளி இருப்பதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உண்மையில், இதை ஒரு பெரும் பிரச்சினையாக நாம் கருதமுடியாது. ஏனெனில், பொதுவாக எல்லா மக்களும் ஏதோவொரு காலகட்டத்தில் இவ்வாறான அனுபவங்களை தமது வாழ்வில் சந்தித்திருக்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்தை 'இலத்திரனியல் யுகம்' என்று சிலரும், தகவல் 'பரிவர்த்தனை யுகம்' என்று இன்னும் சிலரும் வர்ணிக்கின்றனர். இவ்வாறு வர்ணிப்பதிலும், எமது வாழும் சூழலானது மாற்றியமைக்கப்பட்டுள்ளதை யாரும் மறுக்கமுடியாது. இம்மாற்றமானது எம் தனிப்பட்ட வாழ்க்கை முறையை, வேலை முறையை இன்னும் எம் அனுபவதற்திற்குக்கூட எட்டாத பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது நிச்சயமானது.

பொதுவாக, இன்று நாம் வேலை செய்யும் வேலைத் தளங்கள் மாறுகின்ற அல்லது மாற்றத்தை ஏற்படுத்துகின்ற தளங்களாக மாறியுள்ளன. அதாவது, மக்களின் தேவை கருதி உருவான வேலைத்தளங்கள், இன்று மக்களின் தேவைகளை நிர்ணயம் செய்யும் தளங்களாக மாறியுள்ளதை நாம் உணரக்கூடியதாக உள்ளது. இன்றைய தகவல் பரிவர்த்தனை யுகத்தில், நாம் பெரும் தகவல் சுமைத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளோம். இன்று ஒரு சிறுகணப்பொழுதில் நாம் பெரிய சவால்களை சந்தித்து நிற்கின்றோம். அதாவது, தொழில்நுட்ப மாற்றத்தை அறிந்து அதனைக் கற்று அதற்கு இயைந்து வாழப்பழகுவதுடன் அதில் தேர்ச்சி உள்ளவர்களாக மாறவேண்டியும் இருக்கின்றது.

'தொழில்நுட்ப மாற்றம் அல்லது வளர்ச்சியானது எமது வாழ்வுமுறையை அல்லது வேலைமுறையை மாற்றுவதன் மூலம், நாம் எமது எதிர்காலத்தைப் பயமின்றி எதிர்கொள்ளத் தயாராகலாம். அதாவது, படிப்படியாக முரண்பாடுகளைத தொழில்நுட்பத்தில் கண்டு, அதற்கு முகங்கொடுத்து வெற்றி கொள்வதன்மூலம், நாம் இலகுவாகத் தொழில்நுட்ப துறைசார் பயத்திலிருந்து எம்மை விடுவித்து, தொழில் நுட்பத் துறையில் சற்று ஆர்வங்காட்ட ஆரம்பிக்கலாம்.

இன்று சிறந்து விளங்கும் தொழிலகங்கள் எதிர்காலத்தில் விருத்தியடையலாம் அல்லது வீழ்ச்சியடையலாம். ஆனால், தொழிலாளர்களாகிய நாம், புதிய தொழில்நுட்பத்திற்கு முகங்கொடுக்கத் தயாராக வேண்டியுள்ளது. ஆகவே, நாம் விரைவில் புதிய மாற்றங்களைச் சரியாக சமூகமேம்பாட்டிற்கு அல்லது சமூகமாற்றத்திற்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. இன்று உலகில் பல குழப்பகரமான நிகழ்வுகள் நடப்பதற்கு - சமூகத் தலைவர்கள், அரசியல்வாதிகள், கற்றோர், பெற்றோர் போன்றவர்கள் தொழில்நுட்ப மாற்றத்தைப் புரிந்துகொள்ளாத்தன்மையும் ஒரு காரணமாக அமைகின்றது. ஏனென்றால், இவர்கள் சமூகத்தின் இயக்கப்பாட்டை முடிவுசெய்பவர்களாக இன்று உள்ளனர். ஆனால், இவர்கள் இன்றைய நவீன தொழில்நுட்ப சமூகத்தில் பிறக்கவில்லை. அத்துடன், இந்த அதிவேக தொழில்நுட்ப சமூக மாற்றத்தில், இவர்கள் வாழ்ந்து பழகவும் இல்லை.

பழமைகளைக் கைவிட்டு, புதியவைகளைப் பின்பற்றி வாழ்வு முறையை இலகுவாக அல்லது சந்தோஷமாகக் கழிக்க முயல்வது, எமக்குச் சில சந்தர்ப்பங்களில் கசப்பாகவுள்ளது. எவ் வாறாயினும் படிப்படியாக புதியமுறைமையைப் பின்பற்றி- உரிய கல்வி முறைமையைத் தேர்ந்தெடுத்து, பொருத்தமான தொழிலைப் பெற்றுக்கொள்ளல் அவசியம். சூழலிற்கு இசைந்து செயற்படுவதற்கான கற்றல் முறைமையும், இசைந்து செயற்படுத்துவதற்கான கற்றல் முறைமையையும், நாம் தெரிந்துகொண்டிருத்தல் அவசியம்.



இன்றைய சூழலில் தொழில்சார் சான்றிதழ் முறைக் கல்வி முறைமை முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. இச்சூழலில் எவ்வாறான சான்றிதழ் முறையை எமது மாணவர்கள் பின்பற்றலாம் என்பதைத் தெரிவதற்கு, நாம் அது சார்ந்த தேவையையும், வேலை வாய்ப்புச் சந்தையிலுள்ள கிராக்கியையும் அறிதல் அவசியமாகிறது. எனவே, இது சம்பந்தமாகப் பின்வரும் பகுதியில் ஆராய்வோம்.

சர்வதேச தரத்தில் கணினி சார்ந்த பரீட்சைகள் இரண்டு வகையாக நடைபெறுகின்றன. அவையானவன -

1. இணையத்தினூடாக நடைபெறும் பரீட்சைகள் **(On Line Exams).**
2. பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் பரீட்சைகள் **(Hall Exams)** என்பன.

(தொடரும்...)

**சேனாதிராசா ஜெயானந்தன்**
**இடைவரவு விரிவுரையாளர்** (computer)
**யாழ். தொழில்நுட்பக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

# தொழில் வங்கி



| நிறுவனம் | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் | Tilko Holidays (Pvt) Ltd |
|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | கிளை நிறைவேற்று அதிகாரி | MANAGER, GUEST HOUSE KEEPER, GUEST HOUSE ASSISTANT |
| அடிப்படைத் தகுதி | முகாமைத்துவக் கல்வி, சமூகவியல்/சமூகவிஞ்ஞானம், சமூக அபிவிருத்தி அல்லது இவை சம்பந்தப்பட்ட துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம். | சுற்றுலாத்துறையில் அனுபவத்துடன், மும்மொழிகளிலும் எழுத, வாசிக்கத் தெரிந்திருப்பதுடன் சரளமாக உரையாடவும் தெரிந்திருக்க வேண்டும். |
| விண்ணப்ப முடிவு திகதி | 30.07.2003 | 27.07.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# திராட்சைச் செய்கைக்கு சவாலான

# பிரதான பீடைகளும் தீர்வுகளும்

**மீண்டும் யாழ்ப்பாணத்தில் திராட்சைச் செய்கையில் ஈடுபடுவோர் தொகை அதிகரித்து வருகின்றது. புதிதாக திராட்சைச் செய்கையில் ஈடுபவதற்கான நாட்டம் அதிகரித்துள்ளது. திராட்சைச் செய்கையில் ஏற்படும் செலவின் பெரும் பகுதி, பீடை முகாமைத்துவத்துக்கே ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் திராட்சையில் சேதம் விளைவிக்கும் பிரதான பீடைகள் பற்றிய இந்தக் கட்டுரையை, வேளாண் பெருமக்கள் வாசிப்பதோடு நின்றுவிடாது, நடைமுறையில் கடைப்பிடித்து பயனடைய வேண்டும்.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

### திராட்சையின் நோய்த் தாக்கம்

### 03) கீழ் பூஞ்சண நோய்.

- ❖ இது திராட்சைக்கொடி, பழம் என்பவற்றைத் தாக்குகின்றது.
- ❖ இந்நோய் இலைகளை உதிரச் செய்வதாலும், பழங்கள் உருவாகுவதைப் பாதிப்பதாலும், அதிகளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றது.
- ❖ சாதகமான சூழற்காரணிகள் உள்ளபோது, ஒரு பருவத்திலேயே 50-100 வீதமான திராட்சைக் கொடியை இலகுவாக அழிக்கவல்லது.
- ❖ ஆரம்பநிலையில் தொற்று ஏற்படின், இழப்பு அதிகமாகும். நோய் தீவிரமடையும்போது இலைகள் உதிர்க்கப்படுவதால், கொடிகளின் வலிமை குன்றி, அடுத்த பருவத்தில் உயிர்ப்பான அரும்பு உற்பத்தியைக் குறைப்பதுடன் அரும்புகள் விரியமுடியாத நிலையும் ஏற்படுகிறது.
- ❖ கவாதது **(Pruning)** செய்தபின், 30-40 நாட்களில் தொற்று ஏற்படின் இழப்பு அதிகம்.

**நோய் அறிகுறிகள்**

ஒரு கொடியிலுள்ள பச்சை நிறமான, சதைப் பற்றான தாவரப் பகுதிகள, அதாவது - இலை, தண்டு, தந்து, பூந்துணர், பிஞ்சு என்பன தாக்கத்திற்குள்ளாகின்றன.

**இலைகளில் -**

பூஞ்சணத்தின் விரைவான வளர்ச்சியின்போது, இலைகள் அதிகமான தாக்கத்திற்குட்படுகின்றன.

ஆரம்பத்தில் இலையின் மேற்புறத்தில் ஒழுங்கற்ற வடிவிலான சிறிய மஞ்சள் நிறப் புள்ளிகள் தோன்றுகின்றன.

அத்துடன், பூஞ்சண வித்திக்கலன் தாங்கி வளர்ச்சியால் இலையின் கீழ்ப்புறத்தில் வெண்ணிற பங்கசு வளர்ச்சியைக் காணலாம்.

இறுதியில் பாதிப்பிற்குட்பட்ட பகுதிகள் மண்ணிறமாகி விடுவதுடன், வித்துக்கலன் தாங்கிகளும் சாம்பல் நிறமடைகின்றன. இலைப்புள்ளிகள் பெரிதாகி, ஒன்று சேர்ந்து அகனற இறந்த பிரதேசங்கள் உருவாகுவதுடன், இதன் விளைவாக இலையும் உதிர்வடைகிறது.

**கிளைகளில் -**

பொதுவாக 10-15 செ.மீ. நீளமுடைய கிளைகளைத் தாக்குவதுடன், பாதிப்பிற்குட்பட்ட கொடிப் பகுதிகள் சுருண்டு, கபிலநிறமாக மாறுகின்றன.

**பூந்துணரில் -**

தொற்றுக்குள்ளான பூந்துணரில் கிளைகளிலுள்ளவாறே கபிலநிறப் புள்ளிகள் காணப்படுகின்றன. இறுதியில் பூந்துணர் இறக்கின்றதுடன், உதிர்வடைகிறது.

**பழங்களில் -**

பிஞ்சுப் பருவம் உருவாகி 5 - 6 மி.மீ. விட்டமுடைய காயகள் வரும்வரை உள்ள பருவம், தொற்று ஏற்படுவதற்குச் சாதகமானதாகும்.

தொற்று ஏற்பட்டால், பழங்கள் பச்சை கலந்த நீலநிறமாகித் தோல் கடினமடைந்து சுருங்கி உதிர்கின்றன. அல்லாவிடில் எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைந்து தொடந்திருக்கும்.

**நோய்க் காரணி பற்றி**

- **Plasmopara Viticola** எனப்படும் ஒருவகை பங்கசு இந்த நோயை ஏற்படுத்துகின்ற ஒரு கட்டுப்பாடற்ற ஒட்டுண்ணியாகும்.
- தாவரக் கலங்களிடையே வளர்ந்து நீர், கனியுப்பு என்பவற்றை உறிஞ்சுகின்றது.
- இப்பூஞ்சனம் வித்திக்கலன் தாங்கிகளை இலைவாயினூடாக உருவாக்கி, அதன் நுனியில் எலுமிச்சைப் பழவடிவ வித்திகள் இரவு நேரத்தில் உருவாகின்றன.
- இவ்வித்திகள் அதிகநேரம் சூரிய ஒளிக்கு வெளிக்காட்டப்படும்போது உயிர்ப்பற்றதாகிறது. எனவே, காலை நேரங்களிலேயே தொற்று ஏற்படுகின்றது.

**நோய் விருத்தி**

- இப்பங்கசு முட்டை வித்திகளை உருவாக்கி- விழுந்த இலைகள், அரும்புகள் நிலையான இலைகளினிடையே கழிக்கின்றது.
- இது முளைப்பதற்கு ஈரப்பற்றுடைய மண் அல்லது நீர் தேவைப்படுகின்றது.
- இவ்வித்திகள் காற்று, நீர் மூலம் அருகிலுள்ள திராட்சை மர இலைகளைத் தொற்றுகிறது.

(800-2400) வித்திகள், 1cm$^2$ பரப்பு - மாலை 6 மணியளவில்)

- இவ்வித்திகள் 5 நாட்களுக்கு உயிர்ப்புள்ளதாக இருக்கும்.
- இப்பங்கசின் வாழ்க்கை வட்டம் முடிய 5-18 நாட்கள் தேவைப்படுகிறது.

அதிகளவு பூஞ்சண வளர்ச்சியால் தாவரக் கலங்கள் பெரிதாவதால் கொடிப்பகுதி, தண்டுப்பகுதிகளில் கபிலநிற குழிப் பிரதேசங்கள் உருவாவதால் அப்பகுதி முறிவடைகிறது.



**தடுப்பு முறைகள் -**

1. கவாத்தின்போது கத்தரித்தவையையும், தொற்றுக்குட்பட்ட தாவர மீதிகளையும் அகற்றி, அரும்புகள் உருவாகும் முன்பே எரித்தல்வேண்டும்.
2. சூரிய ஒளி நன்கு ஊடுருவக் கூடியவாறு நெருக்கமாக உள்ள கொடிப்பகுதிகளை அகற்றவேண்டும்.
3. நீர் வடிதிறன் குறைந்த மண் உள்ள பிரதேசங்களில் சொட்டு நீர்ப்பாசனம் சிறந்தது.
4. கொடிகள் சரியான இடைவெளியில் நடுகை பண்ணுவதுடன், இலைகள் தரைக்குக்கிட்ட இல்லாதவாறு, கொடி அமைப்பை ஒழுங்கமைத்தல்.
5. எதிர்ப்பு இனங்களைப் பாவித்தல்.
   உ+ம் - சம்பியன், காடினல்.
6. செப்புப் பங்கசு நாசினியைப் பாவித்தல்.
   போடோ கலவை 4:4:50 என்ற விகிதத்தில் பாவிக்கலாம். இதுவரை செனப், மெனெப், மங்கோ செப், கப்ரான் எனபவற்றையும் பாவிக்கலாம்.

இதுதவிர 5 முறை தடுப்பிற்கான பங்கசு நாசினி விசிறுகளையும் செய்யலாம். அதாவது -

1. கொடிகளைக் கத்தரித்தவுடன்
2. கத்தரித்து 3-4 கிழமைகளின் பின்
3. மொட்டு பூக்க முன்
4. பிஞ்சுகள் தோன்ற ஆரம்பிக்கும்போது
5. வளர்ச்சியின்போதும், கவாத்தின் போதும்.

றெடோமில், மங்கோ செப், செப்புக்கலவைகள், போடோ கலவை என்பவற்றைச் செப்பு / மங்கோ என்பவற்றில் ஒன்றைத் தகுந்த அளவில் பாவிப்பதன்மூலம் இப்பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்தலாம்.

### 04) துகள் பூஞ்சண நோய்

- ❖ இந்நோய் திராட்சை வளரும் எல்லா மரங்களிலும் பொதுவாகக் காணப்படுகின்றது.
- ❖ இது பழவிளைச்சலையும், தரத்தையும் பாதிப்பதால் தீவிர இழப்பைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்துகின்றது.

**நோய் அறிகுறி -**

- தாவரத்திலுள்ள பச்சைநிறப் பகுதிகள் யாவற்றையும் இது தாக்குகிறது. தாக்கத்தினளவு, தொற்று ஏற்பட்ட பகுதி, காலம் என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகிறது.
- இப்பூஞ்சணம் சிறப்பாகப் பழங்களைத் தாக்கி, அவற்றை வெடிக்கச் செய்வதுடன், தொடர்ந்து அழுகக்கூடிய நிலையையும் உருவாக்குகிறது.
- இளம் இலைகள், பூக்கள், பிஞ்சுகள், கந்துகள், தண்டுகளில் வெண்ணிறப் பவுடர் போன்ற தோற்றத்தை அவதானிக்கலாம்.

**இலைகளில் -**

- எல்லா நேரத்திலும் எல்லா வயதுள்ள இலைகளையும் இந்நோய் தாக்குகிறது.
- இலையின் இரு பக்கமும் தொற்றுதலுக்குள்ளாகின்றன. பாதிப்புற்ற / தொற்றுக்குட்பட்ட இலைகள் பழுப்பு நிற, கடும் பச்சை நிறமாக இருப்பது பாதிப்புற்றதற்கான முதல் அறிகுறிகள். பின்பு இதனைத் தொடர்ந்து இலையின் மத்திய பகுதி, விளிம்புகள் உலர்ந்த தன்மையுடையதாக மாறுவதுடன், விளிம்புகளில் சிறிய மஞ்சள் நிற/மண்ணிறப் புள்ளிகளைச் சூரிய ஒளியில் அவதானிக் கலாம்.
- தொடர்ந்து வெண்ணிற (பவுடர் போன்ற) பரப்புகள் இலையின் இருபுறங்களிலும் உருவாகி இணைந்து, இலை முழுவதும் வெண்ணிறமாக - மா பூசியதுபோல மாறுகிறது.
- இப்பூஞ்சணம் பின் வளர்ந்து சாம்பல் நிறமாகி, பின் இறுதியில் கறுப்பு நிறமாகிறது.
- இத்தாக்கத்தால் இலைகள் உருக்குன்றுவதுடன், நிறமற்றும் போகிறது.

**கொடி -**

- பாதிப்பிற்குட்பட்ட கொடிகள் வளர்ச்சி குன்றுவதுடன், வாடிய தோற்றத்தையும் கொண்டிருக்கும்.

**காம்புகளில் -**

- தொற்று ஏற்பட்டு, வன்மையாகி இலகுவாக முறிவடைகிறது.

**கிளைகளில் -**

- தொற்றுக்குள்ளானவை வாடிய தோற்றத்தைக் காட்டுகிறது.

**பூக்களில் -**

- முதலில் வெண் சாம்பல் நிறத்தை அவதானிக்கலாம். பின்பு, இவை உலர்ந்து உதிர்வடைகிறது.

**பழங்களில் -**

- பிஞ்சு உருவானதிலிருந்து பழுக்கும்வரை, இந்நோய்த் தொற்றுக்குச் சாதகமான காலமாகும்.
- நோய் தீவிரமான நிலையில் உலர்ந்து, உதிர்ந்து விழுகின்ற நிலைமையும் ஏற்படுகிறது.
- சிலவேளைகளில், முற்றிய நிலையில் பழம் விரிவடைதலைத் தடுப்பதுடன் சிறிதான, ஒழுங்கற்ற வடிவுள்ளதாகவும் மாறுகிறது.

**நோய்க் காரணி -**

- இந்நோய் **Clnanula Necator** என்னும் பூஞ்சணத்தால் ஏற்படுத்தப்படுகிறது. இதுவும் ஓர் கட்டுப்பட்ட ஒட்டுண்ணியாகும். புதியமுறை இனப்பெருக்கத்தின்மூலம், அதிகளவு நீள்வட்ட வடிவ வித்திகளை உருவாக்குகிறது.
- கலப்பு இனப்பெருக்கத்தின்மூலம் கனியுடலங்களை உருவாக்கி, அதன்மூலம் வித்திகளை உருவாக்குகின்றது.

**நோய் விருத்தி -**

- இப்பூஞ்சணம் கனியுடலங்களை உற்பத்தி செய்வதற்கு, சூழற்காரணிகள் முக்கியபங்கு வகிக்கின்றன. மழை காலங்களில் மழைநீருடன், இக்கனியுடலங்கள் பரம்பலடைந்து பட்டைகளினுள் அரும்பு, இலை உதிர்ந்த இடங்களுள் தங்கியிருந்து, அடுத்த பருவத்தில் தாவரத்திற்கு இழப்பை ஏற்படுத்துகிறது.
- பொதுவாக, 21-30 °c - வெப்பநிலையில் - வித்திகள் விரைவாக முளைத்துத் தொற்றை ஏற்படுத்துகின்றன. உலர் கால நிலையுடன் போதிய ஈரப்பதனும், இந்நோய் தீவிரத்திற்குச் சாதகமானவை.

**தடுப்பு முறைகள்**

1. தோட்டத்தைச் சுத்தமாகப் பராமரித்தல்.
2. இலைகள் உதிர்ந்தவுடன் கொடிகளைக் கவாத்துப் பண்ணுதல்.
3. நெருக்கமில்லாதவாறு கொடிகளை ஒழுங்கமைத்தல்.
4. தாவரத்தில் நோய்த் தொற்றுக்குள்ளான பக்கங்களிலுள்ள கொடிகளைக் கத்தரித்தல்.
5. சல்பர் காபண்டசிம் (பெவஸ்டின்) சிபார்சு செய்யப்பட்ட அளவு 15 **kg/ha.**

இது 3 முறை செய்யப்படவேண்டும்.



**பா.ஜெயசீலன் (விரிவுரையாளர்)**
விவசாய உயிரியற்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சங்கானை | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 32/= | 25/= | 20/= | 35/= | 40/= | 25/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 60/= | 80/= | 70/= | 70/= | 80/= | 70/= |
| கத்தரிக்காய் | 25/= | 60/= | 30/= | 40/= | 40/= | 40/= | 60/= |
| பாகற்காய் | 50/= | 35/= | 30/= | 45/= | 40/= | 40/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 12/= | 20/= | 35/= | 20/= | 10/= | 20/= |
| கரட் | 50/= | 45/= | 70/= | 70/= | 20/= | 40/= | 60/= |
| பீற்றூட் | 35/= | - | - | 40/= | - | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 75/= | 60/= | 80/= | 80/= | 50/= | 80/= | 80/= |
| வெங்காயம் | 30/= | 20/= | 30/= | 40/= | 25/= | 20/= | 10/= |
| பச்சை மிளகாய் | 40/= | 40/= | 49/= | 50/= | 40/= | 30/= | 35/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்*
*தன்நோய்போல் போற்றாக் கடை.*

- திருக்குறள்

## நமது நோக்கு

### பாதையைத் திருத்துங்கள்!

யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் வைத்து அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன - புனரமைக்கப்பட்ட பாடசாலைகளைக் கையளிக்கும் விழாவில் கலந்துகொள்ள அனுதிக்கப்படாது, பல்கலைக்கழக மாணவர்களால் திருப்பியனுப்பப்பட்ட சம்பவம் - தமிழ்மக்களை ஏமாளிகளாக்கும் எத்தகைய செயற்பாடுகளுக்கும் இந்த மண்ணில் இடமில்லை என்பதை மற்றுமொருமுறை எடுத்துக் காட்டியிருக்கிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு என்னும் பெயர்களில் - யாழ்ப்பாணத்தில் ஆக்கபூர்வமாக எதனையும் சாதித்துவிடாது- அரசியல் ஆதாயம் தேடுவதை மட்டும் குறியாகக்கொண்டு யார் வந்தாலும், அவர்களது 'செப்பிடுவித்தை'களுக்கு மயங்குபவர்கள் நாமல்லர் என்பதை தமிழ் மக்களின் சார்பில் பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் எத்தனையோ பாடசாலைகள்- உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் மூடுண்டு கிடக்கவும், பல பாடசாலைகள் இன்னமும் இராணுவப் பிரசன்னத்துக்குள் அமிழ்திருக்கவும், அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாது - வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனம் புனரமைத்த பாடசாலைகளை, அந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்குக் கையளிக்கும் வைபவத்தில் மட்டும் பங்கேற்பதற்குள்ள தார்மீக நியாயம் பற்றி அமைச்சர் சிந்தித்திருக்கவேண்டும், அழைத்தவர்களும் யோசித்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது மூலைக்குமூலை நடக்கும் விழாக்களுக்காக அமைச்சர்கள் பறந்துவந்து - அவற்றில் பங்கேற்றுத் திரும்புவதும்,

இல்லையேல் - கூரை, தகடு, கற்கள், சீமெந்து, கோப்பைகள், வாளிகள் போன்றவற்றை வழங்கி - மக்களின் 'சுமுகவாழ்வுக்கு உதவுவதும்',

வர்த்த விழாக்களையும், களியாட்டங்களையும், கண்காட்சிகளையும் நடாத்தி - தெற்கு வர்த்தகர்கள் இங்கு கடை பரப்ப வசதி செய்து கொடுத்துவிட்டு, 'வர்த்தகம் மூலம் சமாதானம்' எனப் பீற்றிக்கொள்வதுமாக,

- எந்தெந்த வழிகளில் 'சாதிக்கமுடியுமோ அவற்றையெல்லாம் சாதித்துவிடத்தான்' இப்போது ஆர்வம் காட்டப்படுகின்றது.

இவற்றை விடுத்து - ஆண்டுகள் கணக்கில் தொடர்ந்த போரினால் சிதைந்துபோன கட்டமைப்புக்களை மீள உருவாக்குவது பற்றியோ,

நீண்டகால நோக்கில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவோ,

மக்கள் - தமது இயல்பு வாழ்க்கையைத் தொடங்குவதற்கான, உண்மையில் தேவையான உதவிகளை வழங்குவது பற்றியோ கருத்தில் எடுக்காது-

'சுண்டல் விநியோகிப்பது' மாதிரியாகவே - தமிழ் மக்களுடன் அமைச்சர்கள் நடந்துகொள்ள முனைகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் - அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன திருப்பியனுப்பப்பட்ட விவகாரம் - அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவான, வலுவான செய்தியைச் சொல்லியிருக்கின்றது.

இனிவரும் நாட்களில் - வடக்கிற்கு, காதில் பூச்சுற்றவென எவர் வந்தாலும், அவர்களுக்கு மக்களிடமிருந்து கிடைக்கவிருக்கின்ற வரவேற்பு இதுவாகத்தானிருக்கும் என்பதே அச்செய்தியாகும்.

மெய்யான அர்ப்பணிப்புடன், விசுவாசமான நோக்கங்களுடன், மக்களின் நலனில் உண்மையாக அக்கறை செலுத்துபவர்கள் மட்டுமே - இனி, யாழ்.குடா நாட்டு மக்களைச் சந்திக்கத் திராணியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதையும் - அவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

மாணவர்களின் எதிர்ப்பின் உள்ளார்த்தத்தை, அவர்களிடமுள்ள ஆதங்கத்தை, கோபப்படுவதன் நியாயத்தை - தெற்கிலிருந்து வருவோர் இனியாவது சரியாக உணர்ந்துகொண்டு - நல்ல முறையில் செயலாற்றி, மக்களது நன்மதிப்பைப் பெறமுயற்சிப்பார்களேயானால்-

அது - ஆரோக்கியமான நட்புறவுக்கு வழிகோலும் என்பதை உணர - நேற்றுமுன்தினத்தைய சம்பவம் ஒரு வாய்ப்பைத் தந்ததாகட்டும்.

அதேவேளை - நேற்றைய சம்பவத்தினூடாக, வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புக்களும் - மக்களது மனநிலையைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

இந்தத் தொண்டர் நிலையங்களின் சேவையை- மக்கள் மனமுவந்து வரவேற்பதுடன், கௌரவப்படுத்தி போற்றிநிற்கும் வேளையில் - அவை, தமது சேவைகளில் அரசியல் கலப்பதையும், ஆதாயம் தேட முனைவோருக்கு வாய்ப்பளித்து மக்களின் எதிர்ப்புணர்வைச் சம்பாதிக்காமலிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்வதே - மக்கள் தொடர்பினை நல்ல முறையில் பேண அவற்றுக்குதவும்.

# சந்திரிகா நிகழ்த்தவிருந்த உரை திடீரென ரத்துச் செய்யப்பட்டது!

## இடைக்கால நிர்வாக யோசனைகள் பற்றி முரண்பாடான தகவல்களாம்

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுத் தொலைக்காட்சியில் ஆற்றவிருந்த விசேட உரை ரத்துச்செய்யப்பட்டது. வடக்கு-கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகவும், நிலவும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்துத் தெரிவிக்க இருந்தாக, ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

எனினும், அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகசபை குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பபபட்டுள்ள யோசனைகளுக்கும், இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாகத் தகவல்கள் கிடைத்ததாலேயே - ஜனாதிபதியின் உரை இடைநிறுத்தப்பட்டதாக ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான விளக்கத்தைப் பெற்ற பின்னரே, ஜனாதிபதி சந்திரிகா நாட்டுமக்களுக்கு உரையாற்ற இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

நேற்று இரவு 7.30 மணிக்கு சிங்களத்திலும், 9.30 மணிக்கு ஆங்கிலத்திலும் நாட்டுமக்களுக்கு ஜனாதிபதி உரையாற்ற இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அரசாங்கத்தினால் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள உத்தேச இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் - நால்வரைக் கொண்ட குழு ஒன்றை ஜனாதிபதி சநதிரிகா நியமித்துள்ளார்.

இக்குழுவில் - எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்க ளான நிமால் சிறிபால டீ சில்வா, சுசில் பிரேம்ஜயந்த ஆகி யோர் இடம்பெற்றுள்ளனர்.

அரசாங்கத்தினால் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் உத்தேச இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஆலோசனை அடங்கிய ஆவணம், கடந்த திங்கட்கிழமை - ஜனாதிபதிக்கும் அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையூடாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லமுனையும் வெளிநாட்டவர்கள்!

## விமானநிலைய கண்காணிப்பு தீவிரம்

(கொழும்பு)

அயல்நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்து, இங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமான முறையில் பயணம் செய்பவர்களைக் கண்டுபிடிப்பதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில், புலனாய்வுச் சேவையின் பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக, கருத்துத் தெரிவித்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க - இலங்கைக்குள் வந்து, சட்டவிரோத பயணங்களை மேற்கொள்ளும் நபர்களை, நாட்டுக்குள் நுழையும்போதே, கைதுசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையைப் பயன்படுத்தி - ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமாகப் பயணத்தை மேற்கொள்ளும் வெளிநாட்டவர்களும், உள்நாட்டவர்களுமாகக் கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஜூலை மாதம்வரை, 643 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும், சிலரே இலங்கையர்கள் என்றும் தெரிவித்த அவர்-

இவ்வாறு சட்டவிரோதப் பயணங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டு, நாட்டுக்குள் நுழைபவர்களை - நாட்டின் வாயிலில் வைத்தே தடுக்கவேண்டிய அவசியம் தற்போது எழுந்திருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை, வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாகப் பயணம் செய்து, வேலைவாய்ப்புக்களைப் பெற முயற்சிக்கின்ற இலங்கையர்களை, சரியான திசைக்குத் திருப்புவதற்காக அவர்களுக்குச் சட்டத்திற்குட்பட்ட முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை அளிப்பதற்குத் தாங்கள் தீர்மானித்திருப்பதாக, தொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நீண்டகால அடிப்படையில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற இத்திட்டத்தின் முதலாவது கட்டத்தில், 300 முதல் 400 இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதற்காக, வேலைவாய்ப்பு வங்கியொன்றும் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகப் பயணம் செய்பவர்கள், செல்கின்ற இத்தாலி நாட்டிலும் - இலங்கையர்களுக்குச் சட்டத்திற்குட்பட்ட வகையில் வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு அந்நாட்டு அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. இதன்படி - வருடமொன்றுக்கு 500 இலங்கையர்களுக்கு, இத்தாலியில் வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனக் கொழும்பிலுள்ள இத்தாலி நாட்டின் தூதுவர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு இத்தாலி - ஆயிரம் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி, அதில் 200 இலங்கையர்கள் ஏற்கனவே தமது பணிகளை ஆரம்பித்துவிட்டதாகவும், 800 பேரளவில் மிகவிரைவில் நாட்டைவிட்டுப் புறப்பட இருப்பதாகவும், இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

(200)

## இலங்கையரான செஞ்சிலுவைப் பணியாளர் ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதலில் பலி!

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவில் கணினித் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றிய இலங்கையர் ஒருவர் - ஹிலா நகரில் இடம்பெற்ற துப்பாக்கித் தாக்குதல் ஒன்றில் உயிரிழந்தார்.

இதுதொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஈராக்கில் கணினித் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றிய இலங்கையரான நதீஷா யஸஸ்ஸி ரண்முத்து நேற்றுமுன்தினம் பாக்தாததிற்கு தெற்குப் பகுதியிலுள்ள ஹிலா நகரில் வாகனம் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தார்.

உள்ளூர் நேரம் காலை 11 மணியளவில், இவர் சென்ற வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால். ரண்முத்து அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். ஈராக்கியரான வாகனச் சாரதி காயமடைந்தார்.

37 வயதான ரணமுத்து 1992 ஆம் ஆண்டுமுதல் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவில் பணியாற்றி வந்தார். இவருக்குத் திருமணமாகி 3 வயதான குழந்தையும் உள்ளது. செஞ்சிலுவைக் குறியீடு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த, இந்த வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தமது பணியாளர் உயிரிழந்தது குறித்து சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிர்ச்சி வெளியிட்டிருக்கிறது.

## கலட்டி அம்மன் தேரில் சிற்பங்கள் திருடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் கோயிலின் தேரிலிருந்த சிற்பங்கள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

தற்போது இக்கோயிலின் திருவிழாக் காலமாகையால், தேர்த் திருவிழாவினை முன்னிட்டு தேரை ஆயத்தம் செய்ய முனைந்தபோதே, இத்திருட்டுப் பற்றித் தெரியவந்துள்ளது.

இதுபோன்று அண்மைக்காலமாகப் பல கோயில்களின் விக்கிரகங்கள் மற்றும் தேர்ச்சிற்பங்கள் களவாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# திருமலை - புலிகளின் முகாமுக்கு கனரக ஆயுதங்கள்; பொய்யான தகவல் வழங்கியவர் கடற்படை அதிகாரியே!

## உளவுப் பிரிவு விசாரணைகளிலிருந்து தெரியவந்தது

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மணியரசன் குளத்தில் புலிகளால் புதிதாக அமைக்கப்பட்ட முகாமுக்கு, கனரக ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாக, கடற்படைக்குத் தவறான தகவல்களை வழங்கியவர் - ஒரு கடற்படை சிரேஷ்ட அதிகாரியே என்று விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமுக்குக் கனரக ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாகக் கடற்படைக்கு வழங்கப்பட்ட தகவல்களை அடுத்து - இராணுவமும், விமானப்படையும், உளவுத்துறையினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கனரக ஆயுதங்கள் பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இது பற்றிய விபரங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன், கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியிடம் இருந்தும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ அறிக்கை கோரியிருந்தார்.

இந்த விசாரணைகளிலிருந்தே பொய்யான தகவல்களை கடற்படை சிரேஷ்ட அதிகாரி ஒருவரே வழங்கியதாகத் தெரிய வருகின்றது.

தற்போது கொழும்புக்கு வெளியே பணிபுரியும், இந்தக் கடற்படை அதிகாரி - கொழும்பில் நின்றே இத்தகவலை வழங்கியதாகவும், இவருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும், பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்கப் போர்க் கப்பலின் வருகை; பின்னணியிலுள்ள மர்மங்கள் என்ன?

*(22.07.2003 இன் தொடர்ச்சி)*

இதிலுள்ள விசேடம் - எட்டு ஏவுகணைகளை ஒரேநேரத்தில் **Launch** பண்ணக்கூடிய வசதி, பழைய **Model VLS** களில் இந்த **Missiles** ஐ இயக்கவும், கண்காணிக்கவும்



ஒரேயொரு **Control System** இருக்கும்.

ஆனால், **Mark 47** Missiles களை கவனித்துக் கொள்ள **Control System** ஒன்று இருக்கின்றது. இதனால், இவை தனித்தனியாக இயக்கப்படலாம். எல்லாவற்றையும் **Coordinate** செய்ய ஒரு **Remote Launch Panel** இருக்கிறது.

அழுத்தமாகச் சொன்னால் **Missiles** ஐ **Programme** பண்ணி விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம் - **Mark 47** ஐ இலக்குவைத்து, அழிக்க வேண்டியவற்றை அடித்து அழிக்கும்.

**Mark 47 VLS** அமெரிக்கக் கடற்படையின் போர்க்கப்பல்களில் இயங்கவிடாது செய்வதற்கும் ஒரு வழியிருக்கிறது. இது **Mark 47** பயன்படுத்தும் **Weapon system** ஐச் செயலிழக்கவைப்பதன் மூலம் சாத்தியமாகும்.

**VLS** இன் துல்லிய கணிப்புக்குக் காரணம் - அதன் **Radar Panel** களின் தட்டையான அமைப்பு. **Flat Structure.** நீங்கள் இதற்கு முன்னர் ஏவுகணைகளைக் கண்காணிக்கும் **Radar System** எதையாவது பார்த்திருந்தால், ஒரு விடயத்தைக் கவனித்திருக்கலாம். அவற்றின் **Radar** இல் ஒரு தகவல் சேகரிக்கும் பகுதி, ஒரு விரித்தகுடை போன்ற வடிவில் சுற்றிக் கொண்டிருக்கும். ஒரு திசையிலிருந்து வரும் ஏவுகணைகளைத்தான் இப்படியான Radar கள் அறிந்துகொள்ளும். ஆனால், **Radar Panel** சுழற்சியின் ஒருதிசையைப் பார்க்க, எதிர்த்திசையிலிருந்து ஏவுகணை வந்தால், **Radar** அதை அறிந்து கொள்ளாது.

இப்படியான வகையிலான **Radar** கள்தான், பல ஆசிய நாட்டு இராணுவங்களின் போர்க்கப்பல்களில் இன்னமும் உபயோகிக்கப்படுகின்றன. **O'Kane** இலுள்ள Weapon System இன் **Radar Panel** தட்டையாக இருப்பதால் அது சுற்றாது. இருந்த இடத்தில் இருந்தபடியே கப்பலைச்சுற்றி 360° கோணத்தில்வரும், எந்தவொரு ஏவுகணையையும், விமானத்தையும் **Pickup** பண்ணிவிடும்.

இந்த **Radar Panel** அழிக்கப்பட்டாலோ, இயங்காது செய்துவிட்டாலோ **Mark 47 VLS** களை **Manual** ஆகத்தான் இயக்க வேண்டி வரும். அதற்குச் சுமார் பத்துப் பேர்கள் தேவை, நேர அவகாசமும் தேவை. வேகமான கடல் யுத்தத்தில் இந்த இரண்டுமே சாத்தியமில்லை. இதுதான் அமெரிக்க **O'Kane** கப்பலிலுள்ள **Mark** 41 **VLS** இலுள்ள ஒரேயொரு பலவீனம்.

**Mark 47 Gun System** - கடந்த காலத்தின் யுத்த நிகழ்வுகளை நீங்கள் **Follow** பண்ணியிருந்தால், 5.54 வகை **Mark 42 Gun System** பற்றி அறிந்திருப்பீர்கள். ஓரிரு ஆண்டுகளுக்கு முன்புவரை, அதுதான் இராணுவ உலகில் பலராலும் விரும்பப்பட்ட ஒன்று. இலகுவானது, துல்லியமானது.

இதனால், **USS O'Kane** இருக்கும். **Mark 47 Gun System** அதைவிட **Relia yable.**

அத்துடன், இலகுவாக இயக்கப்படக்கூடிய வகையிலான **Gun System, 5 Inches Gun System,** உலகில் மிகவும் பாரம் குறைந்த **Light weight Gun system -** இன்றைய திகதி வரை இதுதான். இதன் நிறை, வெறும் 22 தொன்கள்.

இதில் **Latest** ஆன **Advanced Model** என்றாலும், இதிலுள்ள ஒரேயொருகுறை - **The slowest Fire -** வேகம் குறைவான இயக்கம். அத்துடன், இந்த **Model** ஐத் தயாரித்த போது, அதற்குள் அதிகம் மினக்கெட்டு அமைத்த ஒரு விசேட அமைப்பு அவர்களுக்கு ஆசியாவில் பயன்படாது.

**Mark 47** இலுள்ள இந்த விசேட அமைப்பு, அது இயங்கும் இடத்தின் வெப்ப நிலைக்கேற்ப, தானே வெப்பநிலையை **adjust** செய்துகொள்ளும் என்று சொல்லப்பட்டாலும், அதன் உபயோகம் மிக அற்புதமாக இருப்பது, அதீத குளிருடைய **Snow** பிரதேசங்களில்தான்.

அப்படியான இடங்களில் இவை பனியால் உறைந்துபோன பாகங்களைத் தானாகவே திருத்திக்கொள்ளக்கூடியதே தவிர, ஆசியாவில் வெப்பம் அதிகமான சூழ்நிலையில் பெரிதாக உபயோகப்படாதது இது. ஆனால், ஆசியாவில் முக்கியமாக இரண்டு அல்லது மூன்று வகையான போர்முறைகளை ஒரே நேரத்தில் சந்திக்கவேண்டிய சூழ்நிலைகளில் - அட்டகாசமாக வேலை செய்யக்கூடிய சிறப்பம்சம் **Mark** 15 இற்கு இருக்கின்றது.



அது ஒரேநேரத்தில் வேறு வேறு வகையான வெடிமருந்து வகைகளை **Remote Control button** ஒன்றின் மூலமாக மாற்றி மாற்றி ஏவக்கூடிய தொழிநுட்ப வசதிகொண்டது.

**Mark** 15 **Gun system** ஐ இயக்க, ஒரு தனிநபரே போதுமானது. **Gun Mount** களை இயக்க ஆளே தேவையில்லை. அத்துடன், ஒவ்வொரு **Mount** இற்கும் சொந்தமாகவே அதனது **Magazine** னும், சுமார் 600 **Rounds** களும் **Automatic** ஆகவே, **loard** ஆகும். அமெரிக்கக் கப்பல்களில் **Mark 15 Gun system** ஐ இயக்க, அவர்கள் உபயோகிப்பது **mark - 86 gunfire control system** அல்லது **Mark 460 gun computing System.** அருமையான தொழில்நுட்பம் மூலம் நிமிடத்துக்கு மூவாயிரம் **Rounds** களை ஏவக்கூடியது. விலை கிட்டத்தட்ட 5.6 மில்லியன் டொலர்கள். இவைதான் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த அமெரிக்கப் போர்க்கப்பல் **USS O' Kane** இன் முக்கிய **Plus Points.**

அமெரிக்காவின் கடந்தகால யுத்த நகர்வுகளை நீங்கள் உன்னிப்பாகக் கவனித்திருந்தால், ஒரு முக்கிய விடயத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

அமெரிக்கா தனது போர்க் கப்பல் ஒன்றை வெளிநாடொன்றுக்கு அனுப்பும்போது, சில அதீத முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது வழக்கம். அந்த நாட்டில் ஏற்படக்கூடிய சம்பவங்களால், அதிகபட்சம் எந்தளவு? எந்தமாதிரியான பாதிப்பைத் தங்களது கப்பலுக்கு, அந்த நாட்டிலிருந்து எதிர்பார்க்கலாம் என்ற ஒரு கணிப்பு வைத்திருப்பார்கள்.

இதை **Maximum possible Damage expectation** என்பார்கள். இந்தக் கணிப்புக்கு ஏற்ற வகையிலான போர்க்கப்பல்தான், பாதுகாப்புக் காரணங்களுக்காக தனியே ஒரு நாட்டின் துறைமுகத்திற்கு அமெரிக்காவால் அனுப்பப்படும். என்பதுதான் கடந்தகால நடைமுறை. ஒருவேளை, அந்தக் காண்காணிப்புக்கு ஏற்றவகையில் இல்லாத ஒரு கப்பலை அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அதாவது பழுதுபார்க்க அல்லது எதிர்பாராத வகையில் எரிபொருள் தேவைப்பட்டால், அந்தக் கப்பலுடன் கூடவே அவர்களது **Maximum Possible Damage Expectation** னுக்கு ஏற்ற, வேறொரு கப்பலையும் சேர்த்தே அனுப்புவார்கள். அல்லது இரண்டாவது கப்பலை அந்தக் கடற்பகுதிக்கு நகர்த்தி விடுவார்கள்.

**USS O'Kane** கொழும்புத் துறைமுகத்திற்கு, தன்னந்தனியாக வந்து நங்கூரமிட்டதிலிருந்து - அமெரிக்காவின் இலங்கை மீதான **Possible Damage Expectation** என்ன என்பதை ஊகிக்கமுடியும். *(தொடரும்.....)*

**ரிஷி**

---

# வாடி வதங்கி நிற்கிறது

*(நேற்றைய தொடர்ச்சி....)*

இந்த அருங்காட்சியகத்துக்கு வருவோர் பற்றி நோக்குவோமாயின் - குடாநாட்டைப் பொறுத்தவரை, ஏதோவொரு சில பாடசாலைகளின் மாணவர்கள் எப்போதாவது வந்து செல்கின்றனர். அதைவிட, தொல்பொருளியற் துறையைக் கற்கும் பல்கலைக்கழக மாணவர், தமது கல்விசார் நடவடிக்கைகளுக்காக வந்து செல்கின்றனர். இதைத்தவிர, குடாநாட்டு மக்கள் இந்த நூதனசாலையை எட்டிக்கூடப் பார்ப்பதில்லை. இதேவேளை, தெற்கிலிருந்து வரும் சிங்களமக்களும், வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளும் - அதிகளவில் இந்த நூதனசாலைக்கு வந்து செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. ஆக எம்மவர்களை விட, பிறர் இந்த நூதனசாலைக்கு அதிகளவில் வந்து செல்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த நூதனசாலை தொடர்பில் - எம்மவர்களின் அக்கறையை எடுதது்க்காட்ட ஒரு சிறு உதாரணத்தைக் கூறிக்கொள்ளலாம். இந்த நூதனசாலைக்குப் பிற இடத்திலிருந்து அதிகளவில் பலர் வந்து செல்வதை அவதானித்த, நூதனசாலைக்கு அருகிலுள்ள வீட்டில் இருக்கும் ஒருவர் - நூதனசாலைக்கு வந்த ஊழியர்களிடம், "ஏன் இங்கு அதிகளவானவர்கள் வந்து செல்கின்றனர்" என வினாவியுள்ளார் என்றால், எமது நிலையைப் பார்த்துக் கொள்ளுங்களேன். பாடசாலை மாணவர்களை கசூரினா பீச்சுக்கும், சாட்டிக்கும் எனச் சுற்றுலாவுக்கு அழைத்துச்செல்லும் ஆசிரியர்கள், இந்த நூதனசாலைக்கு ஒருமுறையாவது மாணவர்களை அழைத்துச்சென்று காட்டுதல் வேண்டும். குடாநாட்டு மக்களும், உள்ளூர் உல்லாசப் பயணம் செல்லும்போது, இதற்கு ஒருமுறையாவது கட்டாயம் சென்று பார்த்துக் கொள்ளுதல்வேண்டும். தற்பொழுதுள்ள சூழ்நிலையில் தெற்குக்குச் சுற்றுலா புறப்பட்டுச் செல்பவர்கள் - பல ரூபாவுக்கு நுழைவுச்சீட்டுப் பெற்று, கொழும்பிலுள்ள நூதனசாலையைப் பார்வையிடச் செல்பவர்கள் - எமது பிரதேசத்திலுள்ள நூதனசாலையை நுழைவுக்கட்டணம் எதுவுமின்றிப் பார்வையிட முடியும் என்பதையும் மனத்திற்கொள்ளுதல் வேண்டும். இந்த நூதனசாலையை அதிகமானவர்கள் சென்று பார்வையிடும்போது, அதுகூட இந்த நூதனசாலையின் அபிவிருத்திக்கோ அல்லது திருத்தத்திற்கோ வழிசமைக்கக்கூடும்.



எனவே, குடாநாட்டில் ஒரு அருங்காட்சியகம் இயங்குகின்றது என்பதனை, குடாநாட்டிலுள்ள மக்களில் பெரும்பகுதியினர் அறியாதிருப்பதுடன், பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய பெரும் பொக்கிஷமான இந்த அருங்காட்சியகம் - இன்று கைவிடப்பட்ட ஒரு நிலையிலேயே இருக்கின்றது என்றால்கூட, அது மிகையில்லை. இந்தநிலை மாறவேண்டுமாயின் அனைவரது பங்கும் இங்கு முக்கியமாகும். குறிப்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழகத் துறைசார் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோர் - கூடிய அக்கறை செலுத்தி, இந்த நூதனசாலையின் அபிவிருத்திக்கோ அன்றேல் புனரமைப்புக்கோ உதவுதல்வேண்டும். பொதுமக்களும் எமக்குரிய அரிய பொக்கிஷமான இந்த நூதனசாலையைக் காக்க முன்வருதல் வேண்டும். அரசியல்வாதிகளுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழுத்தங்களைக் கொடுப்பதன் ஊடாக, இந்த விடயத்தில் முக்கிய கவனத்தைப் பெறச்செய்ய முடியும்.

தேவையற்ற விடயங்களுக்குத் தங்களின் அரசியல் இலாபம்கருதி - முக்கியத்துவம் கொடுத்தும், நிதியினை வாரிஇறைத்துக் கொண்டும் இருக்கும் அரசியல்வாதிகள், இது போன்ற நல்ல மக்களுக்கும், சமூகத்துக்கும் பயனுள்ள விடயங்களுக்கும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன்வருதல்வேண்டும். மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் நிச்சயம் இவ்வாறு பயனுள்ள விடயங்களைப் புறக்கணிப்பார்களாயின், அவர்கள் தமக்கு வாக்களித்த மக்களையே ஏமாற்றியவர்கள் ஆவார்கள். இந்தவகையில், குடாநாட்டு அரசியல்வாதிகள் இந்த நூதனசாலை தொடர்பில் தங்கள் கவனத்தினைத் திருப்பிக் கொள்ள வேண்டும். அங்கு நிலவும் ஊழியர் பற்றாக் குறை, புதியவர்கள் எவரும் நியமிக்கப்படாமை, நூதனசாலைக் கட்டடம் கட்டப்பட்ட பின்னர்- இதுவரை புனரமைப்போ, திருத்தவேலைகளோ செய்யப்படாமை, அங்குள்ள பொருட்கள் தொடர்பில் நவீன பாதுகாப்பு வசதிகள் போன்ற பல்வேறு விடயங்களைக் கவனத்தில் எடுத்து, அவசரமாகவே செயலில் இறங்கவேண்டும். இங்கே பணிபுரியும் ஊழியர்கள்கூட, இனியும் பல்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு அகழவாராய்ச்சிப் பணிகளை நிறுத்தி வைத்திருப்பதைக் கைவிட்டு, அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபட முன்வருதல் வேண்டும். ஏனெனில், எமது வரலாறு தொடர்பில் எவ்வளவுக்கு எவ்வளவு சான்றுகளைக் கொண்டுள்ளோமோ, அதுவே எமக்கு வலுமிக்க ஒன்றாக அமையும். பொதுமக்களும் தங்களிடம் கிடைக்கின்ற புதைபொருட்களை, இந்த அருங்காட்சியகத்தில் ஒப்படைக்க முன்வருதல் வேண்டும். அதுவே, சமூகப்பொறுப்புடைய செயலாகவும் அமையும். யாழ். பல்கலைக் கழகமும் தனது அகழ்வாராய்ச்சிகளின் போது, கிடைக்கும் புதைபொருட்களைத் தானே பூட்டிவைத்துக் கொள்ளாமல், அவை

**ஓர் சந்திப்பு - இயேசு**

மக்களின் பார்வைக்கு வைக்கக்கூடிய வழிவகைகளை மேற்கொள்வதுடன், அருங்காட்சியக ஊழியர்களுக்கும் தங்கள் ஒத்துழைப்பைப் பூரணமாக வழங்க முன்வருதல் வேண்டும்

ஆகவே - ஒட்டுமொத்தத்தில், யாழ். அருங்காட்சியகம் தற்பொழுது வேண்டிநிற்கும் திருத்தப்பணிகளோ அன்றேல் அபிவிருத்திப் பணிகள் என்பதோ குடாநாட்டு மக்கள் அனைவரது அழுத்தங்கள் மூலமே நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டிய நிலையிலுள்ளது.

குறிப்பாக - குடாநாட்டு அரசியல்வாதிகள், மக்களின் நலன்கருதி இந்த நூதனசாலையின் அவசர, அவசிய தேவைகளை உடனடியாகவே நிறைவேற்றிக் கொள்ளும் கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யாதுவிடின், அது மக்களுக்கு அவர்கள் செய்த துரோகத்தனமாகவே அமையும் என்பதுடன், என்றோ ஒரு நாள் அவர்கள் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பதென்னவோ கசப்பான உண்மைதான். ☆

# யாழ். நூதனசாலை

# அமெரிக்கப் படையின் அதிகாலை முற்றுகையில் சதாமின் இரு புதல்வர்கள் கொல்லப்பட்டதாக அறிவிப்பு!



தாக்குதல் நடந்ததாகக் கூறப்படும் பங்களா.



சதாமுடன் இரு புதல்வர்களும்.

ஈராக்கின் வடபகுதி நகரான மொளசோலில், நேற்று நடைபெற்ற முற்றுகைத் தாக்குதலில் - சதாம் ஹுசை னின் இரு மகன்மாரான - உதய்யும், குசேயும் கொல்லப் பட்டதாக, ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொளசோலில் - பங்களா ஒன்றில் இவர்கள் இருப் பதாக, ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து, ஹெலிகொப்ரர்களின் உதவியுடன், அந்த பங்களா வைச் சுற்றிவளைத்த சுமார் 200 அமெரிக்கத் துருப்பி னர், தாக்குதல் நடத்தியதில் - சதாமின் புதல்வர்களான உதய் ( வயது 39), குசே (வயது 37) ஆகிய இருவ ரும் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின்போது - இந்த நகரில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றும் நடைபெற்றதில், அமெரிக் கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் ஏழுபேர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சதாமின் இரு மகன்மாரும் - ஈராக்கியப் படைகளை வழிநடத்தியவர்களுமான உதய்யும், குசேயும் கொல் லப்பட்டதன் மூலம், ஈராக்கில், சதாம் ஆதரவாளர்களின் தாக்குதல்களை இனிக் குறைக்க முடியுமென, அமெ ரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக் மீதான படையெடுப்பால், தற்போது நெருக்கடி களைச் சந்தித்துள்ள, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் - சதா மின் மகன்மாரின் மரணம் குறித்த மகிழ்ச்சி தெரிவித் துள்ளனர்.

இவர்களின் மறைவிடம் குறித்துத் தகவல் கொடுத் தவருக்கு, 15 மில்லியன் டொலர் பரிசுத் தொகையை வழங்க, அமெரிக்கா முன்வந்துள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

இதனிடையே, கொல்லப்பட்ட சதாமின் புதல்வர் களது சடலங்களை - விடியோ படம்பிடித்து வெளியி டுவதா, இல்லையா என்பது குறித்து, தற்போது அமெ ரிக்க அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும், கொல் லப்பட்டவர்கள் - உதய் மற்றும் குசே என உறுதி யாக்கிய பின்னரே, இந்தச் சடலங்களின் விடியோ படத்தை வெளியிடுவதென, அவர்கள் சிந்திப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், கொல்லப்பட்டவர்கள் - சதாமின் புதல் வர்களே என்பது, முக அடையாளங்களில் தெரிவதாக, பிரிட்டிஷ் அதிகாரியொருவர் தெரிவித்தார். கொல் லப்பட்ட இவர்களுடன் குசேயின் மகன் மற்றும் மெய்க் காவலர் ஒருவரும் உயிரிழந்திருப்பதாகவும், இவர்க ளின் சடலங்களும் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்ட செய்தி வெளி யானபோது - அநேகமான ஈராக்கியர்கள் இதை நம்ப மறுத்தனர்.

ஈராக்கில் - அமெரிக்கப் படையினர் மீதான தாக்கு தலின் வேகம் அதிகரிப்பதால், அமெரிக்க அவிழ்த் துவிட்ட கட்டுக்கதை இதுவென, ஈராக்கியர் ஒருவர் தெரிவித்தார்.

மொளசோலில் - வர்த்தக நிலையம் ஒன்றை வைத்திருக்கும் மற்றொருவர் தகவல் தருகையில்,

. உதய், குசே இறந்துவிட்ட தகவலை நாம் நம்ப வில்லை. ஏனெனில், அவர்கள் ஒன்றாக இணைந்து ஓரிடத்தில் தங்கியிருப்பதற்கு, சதாம் ஒருபோதும் இடம ளித்திருக்க மாட்டார் எனக் குறிப்பிட்டார்.

சதாமின் புதல்வர்கள் இறந்துவிட்டார்கள் என்ப தற்காக, ஈராக்கில் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படப்போவதில்லையென, பிரிட்டிஷ் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சதாமின் புதல்வர்களது மரணம் உறுதிசெய்யப் பட்டால், அது ஈராக்கில் - அமெரிக்காவின் பிரசன்னத் தில் ஒரு சாதகமான திருப்புமுனையாகுமென, மற் றொரு செய்தியாளர் குறிப்பிட்டார்.



வடக்கு பிலிப்பைன்ஸில் நேற்று வீசிய கடும் சுழல்காற்றினால், சேதமடைந்த தமது வீட்டைப் பார்வையிடும் ஒரு குடும்பம்.

## எதிர்க்கட்சித் தலைவி சூகியை விடுவிக்க பர்மா அரசு மறுப்பு!



பர்மிய எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங் சூகியை, தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்க பர்மிய அரசு முடிவுசெய்துள்ளது. அரசுக் கெதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்த வேளை கைதான சுமார் 91 பேர், நேற்று பர்மிய அரசினால் சிறைக ளில் இருந்து விடுவிக்கப்பட்டபோதி லும், சூகியை விடுவிக்க பர்மிய அரசு மறுத்துள்ளது.

சூகியை விடுவிக்க, மேற்குலகு அதிக அழுத்தத்தைப் பர்மிய அர சுக்கு கொடுத்து வரும் நிலையில், ஆசிய நாடுகள் - இவ்விவகாரத்தில் தலையிடாப் போக்கையே கொண் டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆசிய - ஐரோப்பிய மாநாடு ஒன்று நேற்று இந்தோனேஷியத் தீவான பாலியில் ஆரம்பமானபோது, இவ்விவ காரம் குறித்தும், வடகொரிய விவ காரம் குறித்தும் ஆராயப்பட்டது.

எனினும், பர்மியச் சிறையில் இருக்கும் ஒருவர் பற்றியே மாநாடு முழுவதும் பேசமுடியாது. மாநாட் டில் பேசுவததற்கு முக்கிய விடயங் கள் பல உண்டு என, இந்தோனே ஷிய வெளியுறவு அமைச்சர் தெரி வித்தார்.

## லைபீரியத் தலைநகர் முற்றுகை இறுகுகிறது



லைபீரியப் போராளிகளின் எறிக ணைகள், தலைநகர் மொன்ரோவியா வின் மத்திய பகுதியில் விழ ஆரம்பித் துள்ளது. கடந்த சனிக்கிழமை முதல் தலைநகரைக் கைப்பற்றுவதற்காக போராளிகள் நடத்தும் தாக்குதலில், நூற்றுக்கணக்கான மக்கள் இறந்துள் ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் காய மடைந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் - 81 எம்.எம். மோட் டார் தாக்குதல் நடத்தியவாறு, நேற்று அதிகாலை ஸ்ரொக்ரன் கிறிக் பாலப் பகுதிக்கு முன்னேறியதாக, லைபீரியப் பாதுகாப்பு அமைச்சர் டானி யல் சியா தெரிவித்தார். எனினும், பின்னர் அவர்களது கவனம் வேறு திசைக்குத் திரும்பிவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, தற்போது ஜனாதிபதி ரெய்லர் வசிக்கும் பகுதி எனக் கருதப்படும் மம்பா முனையிலும் மோதல்கள் வெடித்துள்ளன.

## கெலியின் ஒலிப்பதிவு நாடா நீதிமன்றில் ஒப்படைக்கப்படும்!



ஈராக்கிய பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான அறிக்கைகள், எவ்வாறு தவறாகப் பிரிட்டிஷ் அரசினால் கையாளப்பட்டது என - மர்மமான முறையில் மரணமடைந்த பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிட் கெலி, பி.பி.ஸி. க்கு முன்பு அளித்த பேட்டியின் ஒலிப்பதிவு நாடா, நீதிமன்றில் சமர்ப் பிக்கப்படவுள்ளது.

பி.பி.ஸி.யின் விஞ்ஞானத் தக வல் பிரிவின் செய்தியாளர் சூசன் வற்றுக்கு, டேவிட் கெலி அளித்த பேட்டியில், இது தொடர்பாக விரி வாக விபரித்துள்ளார்.

இந்த ஒலிப்பதிவு நாடாவை ஒப் படைப்பதன் மூலம், நீதி விசாரக ளுக்குத் தாம் ஒத்துழைப்பளிக்க முன்வந்துள்ளதாக, பி.பி.ஸி தெரி வித்தது. ஒலிப்பதிவு நாடாவில் உள்ள விபரங்களை வெளியிட மறுத்த அந்த நிறுவனம், இந்த நாடா, முக்கிய சாட்சியமாக அமை யும் என நம்பிக்கை தெரிவித்துள் ளது.

ஈராக் ஆயுதங்கள் தொடர்பாக, பிரிட்டன் தவறான தகவல்களை வெளியிட்டே, ஈராக்மீது பிரிட்டன் படையெடுத்ததாக, விஞ்ஞானி டேவிட் கெலி, பி.பி.ஸி.க்கு பேட்டி அளித்திருந்தமையும், அதைத் தொடர்ந்து சில தினங்களுக்கு பின்பு அவர் மர்மமான முறையில் மரண மாகியிருந்தமையும் குறிப்பிடத்தக் கது.

## போராளிக் குழுக்களின் உறுப்பினருக்கு விடுதலையில்லை என்கிறது இஸ்ரேல்!



கைதிகளை விடுவிக்கும் திட்டத்தில், ஹமாஸ் மற்றும் இஸ்லாமிக் ஜிகாத் போராளி அமைப்புக்களின் உறுப்பினர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள் என்ற இஸ்ரேலின் அறிவிப்பால், புலஸ்தீனர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

இஸ்ரேலிய முப்படைத் தளபதிகளுக்கும் பலஸ்தீன அதி காரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களைத் தொடர்ந்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக, இஸ்ரேலிய வானொலி தெரி வித்தது.

இஸ்ரேலின் இந்த முடிவு - பலஸ்தீன சமாதான முயற்சி களை முடிவுக்குக் கொண்டுவருவதாகவே இருக்குமென, பலஸ் தீனிய கைதிகள் விவகார அமைச்சர் ஹிஸ்காம் அப்டல் ரசீக் தெரிவித்தார். இஸ்ரேலின் இந்த முடிவு - நாளை அமெ ரிக்கா செல்லவுள்ள பலஸ்தீன பிரதமர் அப்பாஸுக்கு நெருக் கடியை ஏற்படுத்துமென நம்பப்படுகிறது.

உலகவலம்

## ஈ-ராக் விவகாரத்தில் தமது அரசு தவறான வழியில் நடந்துள்ளது!

### பெரும்பான்மை அவுஸ்திரேலியர் கருத்து

அவுஸ்திரேலியாவில் நடைபெற் கருத்துக் கணிப்பொன்றில், மூன்றில் இரண்டு பங்கு மக்கள் - தமது அரசு, ஈராக் விவகாரத்தில், தம்மைத் தவ றாக வழிநடத்தியுள்ளதாகக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

ஈராக் மீது படையெடுக்க, பொய்க் காரணங்களை கூறியதான குற்றச் சாட்டுக்கு ஆளாகியுள்ள பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஆகியோரைப் போன்றே, அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவர்ட்டும் அந்நாட்டு மக் களின் குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ளார்.

கருத்துக் கணிப்பிற்குள்ளானவர் களில் 36 சதவீதமானோர் - தாம் தெரிந்துகொண்டே, அவுஸ்திரேலிய அரசின் ஈராக் தொடர்பான தவறான தகவல்களால் வழிநடத்தப்பட்டதாகக் கூறினர்.

31 சதவீதத்தினர் - தம்மை அறி யாமலே, தாம் அரசின் ஈராக் தொடர் பான தவறான தகவல்களை நம்பி யதாகக் குறிப்பிட்டனர்.

### பங்களாதேஷ் கவலைப்படத் தேவையில்லை!

அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டியில் படுதோல்வி அடைந்தாலும், அதுபற்றிக் கவலைப் படத்தேவையில்லை என, பங்களா தேஷின் புதிய பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் கூறியுள்ளார்.

பங்களாதேஷ், தோல்வி கண்டா லும் அதனிடம் தற்போது சில சாத கத் தன்மை காணப்படுவதாக அவர் கூறினார். பங்களாதேஷ் அணி, டெஸ்ட் அந்தஸ்துப் பெற்று, இது வரை எந்த போட்டியிலும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. பயிற்றுவிப்பாளராக வட்மோர் பதவியேற்றபின், பங்களாதேஷ் அணி விளையாடிய முதல் டெஸ்ட் போட்டி இதுவாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குடாநாட்டில் மணல் தட்டுப்பாடு; ஆராய இரு அதிகாரிகள் வருகை!

யாழ்.குடாநாட்டில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான மணலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு, சுரங்கத் திணைக்களத்திலிருந்து உயரதிகாரிகள் நாளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

சுரங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சுனில் பீரிஸ், சுரங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த மண்ணியல் நிபுணர் உதய டீ சில்வா ஆகியோரே, நாளைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள், இந்த வார இறுதித் தினங்களில் வடமராட்சிக்கு விஜயம் செய்து அங்குள்ள மணல் வளம் தொடர்பாக ஆராயவுள்ளதுடன், வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து மணலை அகழ்வதற்கு, சாதகமான பௌதீக சூழ்நிலை அங்கு உள்ளதா என்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.

யாழ்.அரச செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டமொன்றிலும், திங்களன்று இவர்கள் பங்குபற்றவுள்ளனர். இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியியலாளர்களும், கட்டடத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின்போது - யாழ். குடாநாட்டில் கட்டட மூலப்பொருட்களுக்கு நிலவிவரும் தட்டுப்பாடுகள் தொடர்பாகவும், இவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும், கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## இடைக்கால நிர்வாக திட்டவரைபு குறித்து
# பாலாவுடன் கலந்தாலோசிக்க தமிழ்ச்செல்வன் சுவீடனுக்கு?

(கொழும்பு)

வட - கிழக்கில் ஏற்படுத்தப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு குறித்து, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் ஆராய்வதற்காக - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மிகவிரைவில் சுவீடனுக்குச் செல்லவுள்ளதாக, லண்டனை மையமாகக் கொண்டு செயற்படும் செய்திச் சேவையொன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

அரசாங்கம், இடைக்கால நிர்வாகம் குறித்து முன்வைத்துள்ள இத் திட்ட வரைபு குறித்து, விடுதலைப் புலிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர். இவ்விடயம் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் மிக ஆழமாக ஆராய்வதற்கே, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மிகவிரைவில் சுவீடனுக்குப் பயணமாகவுள்ளாரென, அந்தச் செய்திச்சேவை தெரிவித்தது.

இவரது பயணத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நோர்வே அரசு மேற்கொண்டுவருகிறது. இன்னமும் ஒருவார காலத்துக்குள் சுவீடனுக்குச் செல்லவிருக்கும் சு.ப. தமிழ்ச்செல்வன், அங்கு அன்ரன் பாலசிங்கத்துடன் விரிவான முறையில் பேச்சு நடாத்தவிருக்கிறார். பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக லண்டனிலிருந்து அன்ரன் பாலசிங்கம் இந்த வார இறுதியில் சுவீடனுக்கு புறப்பட்டுச் செல்லவிருப்பதாகவும் அந்தச் செய்திச் சேவை மேலும் தெரிவித்தது.

பாலா - தமிழ்ச்செல்வன் ஆகிய இருவருக்குமிடையிலான கருத்துப் பரிமாற்றங்கள், ஒருவார காலம் வரை நீடிக்கும் என்றும், இதன் பின்னரே அரசின் திட்டவரைபு தொடர்பான விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வமான பதில் வெளியிடப்படுமெனவும் தெரியவருகிறது. (200)

# தூதுவர்களுக்கான சிறப்புரிமைகளின் மூலமே புலிகளுக்கு வானொலி உபகரணம் இறக்குமதி!

## பிரதமர் ரணில் நாடாளுமன்றில் அறிவிப்பு

நோர்வே தூதுவர் - இராஜதந்திரிகளுக்கான சிறப்புரிமையைப் பயன்படுத்தியே, விடுதலைப் புலிகளுக்கான வானொலி உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்தார். இதற்கும் அரசாங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வியன்னா உடன்படிக்கைப்படி, வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு சில சிறப்புரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் ஆயுதங்கள் தவிர்ந்த- தூதுவருக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்யலாம்.

இந்த வகையிலேயே, நோர்வேத் தூதுவர்- புலிகளுக்கான வானொலி உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்தார். இதற்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று, பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளுக்கு வானொலிக் கருவியை பெற்றுக்கொடுத்தமை, நாட்டுக்குச் செய்த பெரும் துரோகமெனவும், நாட்டின் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டு விடுமெனவும் எதிர்க்கட்சிகள் கொழும்பில் கடந்த சில மாதங்களுக்கு முன் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தது தெரிந்ததே.

## பொதுமக்களுக்கு மரண அச்சுறுத்தல்

புங்குடுதீவில் - ஈ.பி.டி.பியினரால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை இனந்தெரியாதோர் அகற்றிய சம்பவத்தையடுத்து, நேற்றுக்காலை அப்பகுதிக்கு வந்த நெப்போலியன், போல், பாலதீபன் மற்றும் சிவிலுடையில் வந்த பொலிஸார், பொதுமக்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததாக,

துறையூர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பியுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமர்...

வெஸ்பேர்க் எடுத்துவிளக்கினார்.

ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக இந்தச் சந்திப்பு நீடித்தது. சமாதானப் பேச்சுக்களை விடுலைப் புலிகளுடன் அரசாங்கம் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நெடுமாறன் வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசியதற்காக, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மீது - திண்டுக்கல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை, அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் - செம்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும், 1993 ஆம் ஆண்டு தூண்டிக்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக, நெடுமாறன் மீது தமிழக அரசு வழக்குகளைப் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குடத்தனையில் வான் புரண்டு...

(வயது 21), இவரது சகோதரியான அந்தோனிப்பிள்ளை கஜானி (வயது 18), சுந்தரலிங்கம் இராஜபூபதி (வயது 50), தனபாலசிங்கம் மகேஸ்வரி (வயது 62), மிக்கேற்பிள்ளை சவரிமுத்து (வயது 64) ஆகியோர் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அம்பனிலிருந்து பயணிகளுடன் வேகமாக வந்த வான்,குடத்தனைப் பகுதியில் தடம்புரண்டவேளை, ரேடியேற்றறிலிருந்து வெளியேறிய கொதிநீரினால் அநேகமானவர்கள் எரிகாயங்களுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (13)

# செல்லக்கிளிக்கு அஞ்சலி...

தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரினை விடுதலைப் புலிகளின் யாழ் - நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், முன்னாள் கிராமசேவையாளர் சிவராசா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ் நினைவுத்தூபியை திரைநீக்கம் செய்துவைத்தார். நினைவுத்தூபியில் பதிக்கப்பட்டிருந்த லெப்.செல்லக்கிளியின் உருவப்படத்திற்கு சண்முகநாதன் ஈகச்சுடர் ஏற்ற, வர்த்தகர் விக்னேஸ்வரன் மலர்மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் சி.சிவானந்தன், விடுதலைப் புலிகளின் யாழ்-நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

அத்துடன் - நல்லூர் சட்டநாதர் கோயில் முன்றலில் நேற்றைய தினம் லெப்.செல்லக்கிளியின் 20 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு இடம்பெற்றது.

நேற்றிரவு 7 மணியளவில் வாலையம்மன் சனசமூக நிலையத் தலைவர் பத்மராஜ் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை - விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன், சிவஸ்ரீ குமாரக்குருக்கள், விடுதலைப் புலிகளின் யாழ்-நல்லூர் கோட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

ஆலய முன்றலில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட கொட்டகையில் வைக்கப்பட்டிருந்த லெப்.செல்லக்கிளியின் உருவப்படத்திற்கு யாழ். மாவட்ட மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் மணிவண்ணன் ஈகச்சுடரேற்ற, வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தின் செயலாளர் அருள்நாயகம் மலர்மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி சிறப்புரை நிகழ்த்தினார். (லி)

## தமிழர்கள் தம் தலைவிதியை...

மக்களுக்கு உரிமை உண்டு. தமிழ் மக்களின் தலைமையைத் தென்னிலங்கையிலுள்ள அரசியல் தலைவர்கள் தீர்மானிப்பதற்கு நாம் இணங்கப்போவதில்லை. தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை, தமிழருக்கே உண்டு. இதில் சிங்கள மக்கள் தலையிடக்கூடாது.

தமிழ் மக்களிடமிருந்து விடுதலைப் புலிகளைப் பிரித்துவிட்டால், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியும் என்ற நம்பிக்கையை, தென்னிலங்கைத் தலைவர்கள் கைவிடவேண்டும். இவ்வாறு நினைததால், நாடு பாரிய ஆபத்தை எதிர்நோக்கும்.

தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று, தந்தை செல்வா கூறினார். அந்த இடத்தில் தலைவர் பிரபாகரன் இருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அபிலாஷைகளை நாடாளுமன்றத்தில் எதிரொலிக்கச் செய்வதற்காகவே, தமிழ் மக்கள் - தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர்.

தமிழ் மக்கள் தமது உரிமையைப் பெற்ற பின்னர், ஏனைய சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு ஆட்சேபம் இல்லை.

தமிழ் மக்களுடைய - சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்ற கோட்பாடுகளை தென்னிலங்கைத் தலைமைகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென, அவர்கள் தெரிவித்தனர். (01)

# செல்லக்கிளி நினைவுத்தூபி...

மேற்பட்ட இராணுவத்தினர், மேற்படி நினைவுத் தூபியை சுற்றி வளைத்தனர். இவர்கள் தபாற்பெட்டிச் சந்தியின் நாலாபக்கமும் காவற் கடமைக்காக நிறுத்தப்பட்டனர். அத்துடன் - விசேட கலகம் அடக்கும் பிரிவுப் படையினரும் அப்பகுதிக்கு அழைக்கப்பட்டு, பலாலி வீதியின் இருபக்கங்களும் நிறுத்தப்பட்டனர். இவற்றைவிட விசேட மோட்டார் சைக்கிள் படையணியினரும் அப்பகுதியில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இராணுவ வாகனமொன்றில் எடுத்துவரப்பட்ட நீண்ட தடிகள், தகரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நினைவுத் தூபியைப் படையினர் மூடிமறைத்தனர். தூபியைச் சுற்றி கயிறுகள் கட்டி, எவரும் உள்ளே நுழைய முடியாதவாறும் அவர்கள் தடுத்தனர்.

இதன்காரணமாக, அப்பகுதியில் பெரும் பதற்றம் உருவாகியது. அத்துடன் - அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த படையினரும் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தயாரான நிலையில் காணப்பட்டனர். இராணுவ உயரதிகாரிகளின் பணிப்புரைகளும் அடிக்கடி படையினருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதனால், நிமிடத்துக்கு நிமிடம் அப்பகுதியில் பதற்றநிலை அதிகரித்துச் சென்றது.

ஒரு கட்டத்தில் பலாலி வீதியினூடான பொதுமக்களின் போக்குவரத்துக்களும் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆனால், அப்பகுதியில் பொதுமக்கள் திரண்டு நின்றனர். அதேவேளை, கலகம் அடக்கும் படையினர் நினைவுத்தூபிக்கு அருகில் எவரையும் செல்லவிடாது தடுத்து வைத்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பான தகவலறிந்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையீடு செய்தனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்துவந்த கண்காணிப்புக்குழு அதிகாரிகள் நிலைமையை நேரில் கண்டறிந்தனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் படையினரின் மேற்படி நடவடிக்கை தொடர்பாக அவர்கள் படையினரிடம் விளக்கம் கேட்டனர். அத்துடன் - பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துவைக்கவும் கண்காணிப்புக்குழுவினர் முயற்சித்தனர். எனினும், படையினர் அப்பகுதியிலிருந்து விலகமறுப்புத் தெரிவித்து - தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தனர்.

இதேவேளை - அப்பகுதியில் பதற்றம் மேலும் அதிகரித்தது. படையினரின் அடாவடித்தனத்தை தடுத்துநிறுத்தவும், படையினரால் மூடிமறைக்கப்பட்ட லெப். செல்லக்கிளியின் நினைவுத் தூபியை நெருங்கிச்செல்லவும் பொதுமக்கள் ஒன்று திரண்டு தயாராகினர். பொது மக்களைத் தடுத்துநிறுத்தப் படையினரும் உஷார்படுத்தப்பட்டனர். இதனால், அப்பகுதியில் பொதுமக்களுக்கும் படையினருக்கும் எந்த நிமிடமும் மோதல் வெடிக்கும் அபாயம் உருவாகியது.

இதனைத் தொடர்ந்து - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பலாலி இராணுவத் தலைமையகத்துடன் தொடர்புகொண்டனர். அதையடுத்து, பலாலிப் படைத்தளத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை தொடர்ந்து, லெப்.செல்லக்கிளியின் நினைவுத்தூபியை சுற்றிவளைத்து நின்ற படையினர் அங்கிருந்து விலகிச்சென்றனர்.

இதனையடுத்தே, அப்பகுதியில் நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பியது. (க,ரா,25)

## பல்கலைக்கழக சம்பவத்தால்...

ராகக் கலந்துகொள்ள -

புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டொக்டர் ஜெயலத் ஜயவர்த்தனவை தாமே அழைத்ததாகவும், இதற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால், அங்கு நிகழ்வை நடத்தமுடியவில்லை என்றும். பின்னா நிகழ்வு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடத்தப்பட்டது என்றும்,

இவ்வாறான நிகழ்வுகளை சமாதான சூழலில்தான் தாம் நடத்த விரும்புவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு செயற்பட்டமை அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனவிற்கு எதிராகவே தவிர, தமக்கு எதிராக அல்ல என்று, ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## வியாசனின் உலைக்களம்...

வடிவமைக்கப்பட்ட இந்த நூலுக்கான முன்னுரையை அரசியற்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், மதிப்புரையை புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் ச.பொட்டுவும் எழுதியுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ள வெளியீட்டு விழாவில் - விடுதலைப் புலிகளின் பிரமுகர் க.வே.பாலகுமாரன், வெளிச்சம் ஆசிரியர் சி.கருணாகரன், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு, எழுத்தாளர் ஐ.சாந்தன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர்.

அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு வைப்பார். சிறப்புப் பிரதிகளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் வழங்கிக் கௌரவிப்பார் என, விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.